பக்கங்கள் : எட்டு

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஐப்பசி 26 ஞாயிற்றுக்கிழமை (12.11.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 347

# ரவிராஜ் எம்.பிக்கு 'மாமனிதர்' விருது தேசியத் தலைவர் வழங்கிக் கௌரவிப்பு

கிளிநொச்சி, நவ.12

கொழும்பில் நேற்றுமுன்தினம் இனந் தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுப் படு கொலை செய்யப்பட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜுக்கு தமிழர் தேசத்தின் அதி உயர் விருதான 'மாமனிதர்' விருது வழங்கப்பட்டுள்ளது.

ரவிராஜ் எம்.பியின் இனப்பற்றுக்கும், விடுதலைப் பற்றுக்கும் மதிப்பளித்தும்-

அவரது விடுதலைப் பணியைக் கௌர விக்கும் முகமாகவும் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் தமிழர் தேசத்தின் அதியு யர் விருதான 'மாமனிதர்' விருதினை அவ ருக்கு வழங்கிக் கௌரவிக்கின்றார் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலை மைச் செயலகம் விடுத்த பத்திரிகை அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கை வருமாறு:-

தாயக தேசத்தின் விடுதலையைத் தணி யாத இலட்சியமாக வரித்து, அந்த உயரிய இலட்சியத்திற்காக அரும்பணி ஆற்றி வந்த ஓர் உயர்ந்த மனிதரைச் சிங்களம் பலி கொண்ட செய்தி எமது ஆழ் மனதில் ஒரு பூகம்ப அதிர்வாக இறங்கியிருக்கின் றது. தமிழீழ தேச ஆன்மாவை ஓர் உலுப்பு உலுப்பியிருக்கிறது. நித்தம் சாவையும்

(08ஆம் பக்கம் பார்க்க)

# ரவிராஜ் படுகொலையைக் கண்டித்து கொழும்பில் நாளை மாலை பேரணி

## அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் கலந்துகொள்வர்

கொழும்பு, நவம்பர்12

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து கொழும்பில் நாளை மாலை பேரணி ஒன்று நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து கொழும்பு நகர மண்டபத்தில் கண்டனக் கூட்டமும் நடைபெறும்.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினரின் படுகொலைக்கு கண்டனம் தெரிவிக்கும் முகமாக கடைகளை மூடுமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட உள்ளது.

கொழும்பு தேசிய கேட்போர் கூடத் தில் அரசியல் கட்சிப் பிரமுகர்கள் நேற்று நடத்திய கலந்துரையாடலின் போது கண் டனப் பேரணியை நடத்துவதற்கு முடி வாகியது.

கண்டனப் பேரணியிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள கண்டனக் கூட்டத்திலும் சுதந்திரக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, ஜாதிக ஹெல உறு மய தவிர்ந்த ஏனைய அரசியல் கட்சி களின் பிரதிநிதிகள் கலந்துகொள்வர்.

அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்து வம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர் களும் மற்றும் அரசியல் பிரமுகர்களும்

(08ஆம் பக்கம் பார்க்க)

## ரவிராஜ் கொலை விசாரணை; 'ஸ்கொட்லண்ட்யார்ட்' பொலிஸார் விருப்பம்

கொழும்பு, நவ.12

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் படு கொலை தொடர்பான புலன்விசாரணை களை மேற்கொள்வதற்கு உதவ 'ஸ்கொட் லண்ட் யார்ட்' பொலிஸார் விருப்பம் தெரிவித்துள்ளதாக அறியப்படுகின்றது.

'ஸ்கொட்லண்ட்யார்ட்' பொலிஸார்இது தொடர்பாக சாதகமான பதிலை வழங்கியதாக இங்கிலாந்தில் உள்ள இலங்கைத் தூதரக அதிகாரி ஒருவர்தகவல் வெளியிட்டுள்ளார்.

## ரவிராஜின் பூதவுடலை எடுத்துச்செல்ல அரசு வான்வழிப் போக்குவரத்து வசதி

### அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தகவல்

கொழும்பு, நவ.12

ஏ-9 வீதிக்கு மாற்றீடாக, ரவிராஜ் எம்.பி யின் பூதவுடலை விரும்பிய இடத்துக்கு எடுத்துச்செல்ல அரசு வான்வழிப்போக்கு வரத்து வசதிகளைச் செய்யும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் பாதுகாப்பு தொடர்பான பேச்சாளர் ஹெகலிய ரம்புக் வெல.

இனந்தெரியாத ஆயுததாரிகளால் கொலை செய்யப்பட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜின் பூதவுடலை அவரது சொந்த இடமான சாவகச்சேரிக்கு ஏ-9 வீதியூடாக எடுத்துச்செல்ல அனுமதிக்கவேண்டும் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, ஜனாதிபதி

(08ஆம் பக்கம் பார்க்க)



ரவிராஜ் எம்.பியின் பூதவுடலுக்கு அவரது குடும்பத்தினர் அஞ்சலி செலுத்தியபோது...

## 'ஓசானிக் கிறீன் வன்' பயணிகள் கப்பல் சேவையை நிறுத்தி கொழும்பு திரும்பியது

திருகோணமலை,நவ.12

திருகோணமலைக்கும், காங்கேசன் துறைக்கும் இடையில் பயணிகள் சேவை யில் ஈடுபட்டுவந்த 'ஓசானிக் கிறீன் வன்' என்ற கப்பல் சேவையை இடைநிறுத்தி விட்டு கொழும்பு திரும்பியது.

இக்கப்பல்மூலம் திருகோணமலை யில் இருந்தும் - காங்கேசன்துறையிலிருந் தும் ஒன்றுவிட்ட நாள்களில் பயணிகளை அழைத்துச் செல்ல ஏற்பாடாகியிருந்தது.

கடந்த வாரமே இந்தச் சேவை ஆரம் பிக்கப்பட்டிருந்தது.

மேற்படி கப்பல் கடந்த வியாழக் கிழமை திருகோணமலையிலிருந்து பய ணிகளை ஏற்றிச்சென்ற சமயம் வடமராட் சிப் பகுதியில் கடற்படையினருக்கும்,

(08ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுமுறிப்புக் குளத்தில் சிப்பாய் ஒருவர் உயிரிழப்பு

மட்டக்களப்பு, நவ.12

மட்டக்களப்பு - பொலநறுவ மாவட்ட எல்லையில் கட்டு முறிப்புக்குளம் பகுதி யில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற ஊடுருவல் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்; மற்றொரு சிப்பாய் காயமடைந்தார்.

வாகரையின் எல்லைப் பகுதியான இந்தப் பகுதியில் ஊடுருவிய விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர் என்று தெரி விக்கப்பட்டுள்ளது. (1)

## ஈழத் தமிழர் படுகொலைகளைக் கண்டித்து இலங்கைத் தூதரகம் முன் ஆர்ப்பாட்டம்

### அடுத்த வெள்ளியன்று ம.தி.மு.க. ஏற்பாட்டில்

சென்னை,நவ.12

இலங்கையில், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் படுகொலை செய் யப்பட்டதையும், வாகரையில் தமிழ் அக திகளை இராணுவம் ஷெல் வீச்சு நடத்தி படுகொலை செய்ததையும் கண்டித்தும் -

சென்னையில் உள்ள இலங்கைத் தூத ரகத்தின் முன்னால் பெரும் கண்டனப் போராட்டம் ஒன்றை மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம் நடத்தவுள்ளது.

இக்கண்டனப் போராட்டம் எதிர் வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடத்தப்பட உள்ளதாக ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அறிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக அவர் நேற்று விடுத் துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டி ருப்பதாவது:-

இலங்கைத் தீவில் சிங்கள அரசு தமிழ் இனத்தையே கருவறுக்கும் இனப்படு கொலையை திட்டமிட்டு நடத்திவருகின் றது. ஜேர்மனியில் ஹிட்லர் நடத்திய மனி தப்படுகொலைகளை விஞ்சும் விதத்தில் ஈழத்தமிழ் மக்கள், பச்சிளம் குழந்தைகள் நாளும் படுகொலைக்கு ஆளாகின்றனர்.

செஞ்சோலைக் குழந்தைகள் காப்பகத்தில் சிங்கள குண்டு வீச்சில் 75 மாணவிகள் படு கொலை செய்யப்பட்டு, நூற்றுக்கும் மேற் பட்டோர் படுகாயமடைந்த சம்பவத்தை

(08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

## பவித்திரா (பவி)



நயினாதீவு 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த யசோதரன் - கிருஸ்ணவேணி தம்பதியரின் ஏக புதல்வி **பவித்திரா (பவி)** இன்று (12.11.2006) தனது முதலாவது பிறந்த நாளை லண்டனில் உள்ள ருற்றிங் நகரில் விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், மாமி, பெரியப்பா, பெரியம்மா, தம்பி விஜேயன் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் நயினை நாகபூசணி அம்மன் துணை கொண்டு பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

கச்சேரி கிழக்கு ஒழுங்கை, கச்சேரி. (55154)

**வாழ்த்துவோர்: அம்மப்பா, அம்மம்மா.**

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னையின் மடியில் 20 ★ 09 ★ 1953



இறைவனின் மடியில் 29 ★ 09 ★ 2006

## அமரர் கந்தையா இரட்ணசிங்கம் (சம்பந்தன்)

*அவர்களின் விட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று(12.11.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

*(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)*

*514, மானிப்பாய் வீதி, ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.* (55144) **குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்கள்

## துரை சிவபாதம்



இணுவில், துரை வீதியைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட துரை சிவபாதம் 10.11.2006 வெள்ளிக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி துரை செல்லம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் ஜெயபாலசுந்தரியின் அன்புக் கணவரும் காந்தரூபன்.(கனடா), சிவதர்ஜினி (லண்டன்), ஜெயபிரேமினி, சிவரூபன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் கே.கே.எஸ்., குருவீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற பொன்னுச்சாமி - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் துரை சுப்பிரமணியம், ஜெயராணி(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தயாபரனின்(லண்டன்) அன்பு மாமனும் அருந்தவமலர், கருணாகரன் (கனடா), சிவபாதசுந்தரம், பூலோகசுந்தரி (லண்டன்) ஆலாலசுந்தரம், திரிபுரசுந்தரி, சிவஞானசுந்தரம், ராஜசுந்தரி, மோகனசுந்தரி, ராஜசுந்தரம் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல இன்று (12.11.2006) ஞாயிற்றுக்கிழமை முதல் அஞ்சலிக்காக பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு நாளை (13.11.2006) திங்கட்கிழமை 2.30 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று பிற்பகல் 4.30 மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: திருமதி ஜெயபாலசுந்தரி சிவபாதம்.

*இல.70ஏ, பசல்ஸ் ஒழுங்கை, கொழும்பு -06.*
*தொ.பே.0115514280, 0714292010.* (C/51312)

## E.S.S.அருணாசலம் மகாதேவா



(முன்னாள் வாழைச்சேனை காகித ஆலை கூட்டுத்தாபன உற்பத்தி அத்தியட்சகர்)

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கலைவாணி லேனில் வசித்தவரும் தற்போது கனடாவை வதிவிடமாகக் கொண்டிருந்தவருமாகிய அருணாசலம் மகாதேவா நேற்று (11.11.2006) சனிக்கிழமை கனடா ரொறன் ரோவில் சிவபதமடைந்தார்.

அன்னார் கொக்குவில் கிழக்கு, காலஞ்சென்ற திரு.திருமதி அருணாசலம் மதுரம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் மகேஸ்வரியின் பெறாமகனும் யாழ். கலட்டி, சீனியர்லேனைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு.திருமதி சரவணமுத்து கண்மணி தம்பதியரின் அன்பு மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் ரஜனி (U.K.), ஷிவாணி, மாலினி, மதினி(கனடா) ஆகியோரின்அன்புத் தந்தையும் வேல்தாசன் (U.K.), சிவக்குமார், குகதாசன், கேதீஸ்வரன் (கனடா)ஆகியோரின் ஆசை மாமனும் விதுஷா, டிறேக்கா, ஷகித்தா, அக்ஷனா, தாரிகா, யதுஷன், லாகிஷா ஆகியோரின் ஆசை பாட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடா, ரொறன்ரோவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **ம.ஜோதிநாதன்.**

**கலட்டி.** (55151)

# தொழிற்பயிற்சி

வலி. கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சின் தொழிற் பயிற்சிப் பிரிவில் பயிலும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விவரங்களுக்குப் பயிற்சி நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கோப்பாய் பிரதேச செயலர் கேட்டுள்ளார். (202)

# தரம் 9 மாணவர்களுக்கு மாகாணமட்டப் பரீட்சை

தென்மராட்சி,நவ.12

பாடசாலைகளில் தரம் 9 இல் கல்விகற்கும் மாணவர்களுக்கான மாகாண மட்டப் பரீட்சைகள் நாளைமறுதினம் செவ்வாய்க் கிழமை ஆரம்பமாகவுள்ளன.

தொடர்ந்து ஐந்து நாள்கள் பரீட்சைகள் நடைபெறும்.பரீட்சை நடைபெறவுள்ள நேர அட்டவணை வலயக் கல்விஅலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

நேர அட்டவணைப்படி நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை முதல்மொழி, சமயம் ஆகிய பாடங்களும்-

15 ஆம் திகதி [illegible], சமூகக்கல்வி மற்றும் கவின்கலைப் [illegible]ங்களும்-

16 ஆம் திகதி கணிதம், ஆங்கிலம் ஆகிய ஆகிய பாடங்களும்-

17ஆம் திகதி விஞ்ஞானமும் தொழில் நுட்பமும்இறுதி நாளான 18 ஆம் திகதி சுகாதாரமும் உடற்கல்வியும் மற்றும் இராண்டாம் மொழியுமாகப் பரீட்சைகள் நடைபெறும். (203)

# மண்ணெண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம்,நவ.12

யாழ். ப.நோ.கூ.சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இன்று முதல் பாவனையாளர்களுக்கு 2 லீற்றர் மண்எண்ணெய் விநியோகம் செய்யப்படவுள்ளது.

ஜே/68- றெக்கிளமேசன் கிழக்கு, ஜே/69 - றொக்கிளமேசன் மேற்கு, ஜே/71- குருநகர் மேற்கு, ஜே/72-சின்னக்கடை, ஜே/73 - யாழ்.நகர் மேற்கு, ஜே/81- கோட்டை, ஜே/83- கொட்டடி ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கே இந்த மண்எண்ணெய் விநியோகம் செய்யப்படவுள்ளது.

இதுவரை மண்எண்ணெய் விநியோகம் செய்யப்பட்டு வந்த முறை மாற்றப்பட்டு புதிய முறையில் இன்று முதல் இது நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203)

# ஜி.சீ.ஈ. சாதாரணதர பரீட்சை ஏற்பாடு பூர்த்தி

யாழ்ப்பாணம், நவ. 12

அடுத்தமாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான ஏற்பாடுகள் கல்விவலயம் 1 இல் பூர்த்தியடைந்துள்ளன என்று யாழ். வலய கல்விப் பணிப்பாளர் வே.தி. செல் வரத்தினம் தெரிவித்தார்.

வலயம் ஒன்றில் உள்ள யாழ். கல்வி வலயம், தீவகக் கல்விவலயம், தென்மராட்சி கல்வி வலயம் ஆகியவற்றின் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பரீட்சை நிலையங்கள் மற்றும் பரீட்சை மேற்பார்வையாளர் தொடர்பான விவரங்கள் கணிக்கப்பட்டு பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (202-88)

# கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவன வர்த்தக ஆசிரியர் கருணாகரனின் தந்தை

## இராசையா

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு துயரம் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், விக்னா கல்வி நிறுவனம். (55155)

# மரண அறிவித்தல்

## அழகர்சாமி சரவணகுமார்



அழகர்சாமி சரவணகுமார் நேற்று (11.11.2006) சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: [illegible]

37, [illegible] வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## அருணாசலம் மகாதேவன்



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் மகாதேவன் 11.11.2006 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம் மதுரம்மா மற்றும் மகேஸ்வரியின் பாசமிகு மகனும் புவனேஸ்வரியின் கணவரும் ஜீவா, றூபா, பாமா, பேபி ஆகியோரின் தந்தையும் பபா காலஞ்சென்ற பேபி மற்றும் மல்லி, வாமாஸ், ரஞ்சி, பாலா, கிச்சி ஆகியோரின் மூத்த அண்ணருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்: **திருமதி அருணாசலம் (சின்னம்மா).** (55156)

*மதுர வாசா, கொக்குவில் கிழக்கு.*

## திருமதி மகேஸ்வரி சிவஞானம்



கெருடாவில், சாவகச்சேரியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி மகேஸ்வரி சிவஞானம் (ஓய்வுபெற்ற ஆசிரியை) நேற்று (11.11.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சிவஞானத்தின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும் சிவாஜி (தபால் அதிபர்), சியாமளா (ஆசிரியை - சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை) , கௌசலா (கனடா), மஞ்சுளா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் சகுந்தலா, பௌதிகவியல் பேராசிரியர் கந்தசாமி(பீடாதிபதி பட்டப்பின் படிப்புகள் பீடம் யாழ்.பல்கலைக்கழகம்), தவக்குமார் (கனடா), பிரபாகரன் (கனடா) ஆகியோரின் மாமியுமாவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: **பேராசிரியர் க.கந்தசாமி (மருமகன்).**

*89, பிறவுண் வீதி,யாழ்ப்பாணம்.*
*தொ.பே : 021 222 5369*

## வீரன் கறுப்பையா

இந்தியாவின் தென்சிவகாசியைப் பிறப்பிடமாகவும், கொட்டாஞ்சேனை, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட வீரன் கறுப்பையா 10.11.2006 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரன் - பேச்சியம்மாள் தம்பதியரின் அன்பு மகனும் இராசம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான அப்பாக்குட்டி - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் இரவிச்சந்திரனின் பாசமிகு தந்தையும் மீனாம்பாளின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.11.2006) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பொரளை கனத்தை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: நவரத்தினம், (மருமகன்).

*அரசடி லேன், திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.* (55150)

## கந்தையா சுப்பிரமணியம் (இந்திரன் ஆச்சாரி)



நல்லூரைப் பிறப்பிடமாகவும் நாவற்குழி கிழக்கு தச்சன்தோப்பை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுப்பிரமணியம் (இந்திரன்) நேற்று(11.11.2006) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கந்தையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் அப்புத்துரை - குஞ்சுப்பிள்ளை தம்பதியரின் மூத்த மருமகனும் அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும் லதா, சுசீலா(கிளைமுகாமையாளர், கைதடி), சுரேஸ், றமேஸ்(டோகா), சுஜாத்தா, சுதாகரன், அனோஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான முத்துராசா, இராமச்சண்முகம், நாகேஸ்வரி, ஆனந்தராசா ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற கணேசலிங்கம், சாகாதேவன், லலிதா ஆகியோரின் மாமனும் கஜன், நிதுஜன்,சஜீவன், சிந்துஜன், தரனிகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(12.11.2006)ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிணமுருங்கை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்.**

*கேரதீவு வீதி, நாவற்குழி கிழக்கு, கைதடி.* (55147)

## நடராசா தங்கம்மா

வதிரியைப் பிறப்பிடமாகவும் முரசுமோட்டையை வதிவிடமாகவும் கொண்ட நடராசா தங்கம்மா நேற்று(11.11.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை-வள்ளியம்மை தம்பதியரின் மகளும் கணபதிப்பிள்ளை-வள்ளியம்மை தம்பதியரின் மருமகளும் நடராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம், நடராசா மற்றும் சிவக்கொழுந்து,பரஞ்சோதி ஆகியோரின் சகோதரியும் நாகலட்சுமிதேவி (ஆசிரியை-யா/வடமராட்சி மகளிர் கல்லூரி), ஜெயதேவி (பிரதி அதிபர்-கிளி/முருகானந்தா மகா வித்தியாலயம்), Dr.சிறீதரன் (போதனா வைத்தியசாலை, குருநாகல்), அயிராணி (ஆசிரியை - கிளி/ பன்னங்கண்டி இந்து தமிழ் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயும் அனந்தேஸ்வரன் (அதிபர்- யா/ புற்றளை மகா வித்தியாலயம்), மகேந்திரன் (கனபுரம்), சியாமணி ஆகியோரின் அன்பு மாமியும் தனுஸ்கா, பிரியங்கா, றமனேஷ், சிவங்கி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(11.11.2006) சனிக்கிழமை வதிரியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆலங்கட்டை மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **மு.அனந்தேஸ்வரன்**

(55149)

# இந்தியாவைத் தாக்கியுள்ள 'சிக்குன் குனியா' இலங்கையிலும் பரவும் ஆபத்து உண்டா?

**"சிக்குன் குனியா" என்பது ஒரு வகை வைரஸ் காய்ச்சல். இது ஒருவரிலிருந்து மற்றவருக்குத் தொற்றுவதற்கான வாய்ப்புக் குறைவாக இருந்தபோதிலும் நுளம்புகள் நோய்க்காவிகளாக விளங்குவதால் இந்நோய் விரைவில் பரவக்கூடியது.**

**அண்மைக்காலமாக இந்தியாவில், மிகக்குறிப்பாக எமக்கு அருகில் உள்ள தமிழ்நாட்டில் இந்நோயினால் பலர் இறந்துள்ளனர்.**

**மன்னார் மாவட்டத்தில் இனங்காணப்படாத நோயினால் - ஒருவகை காய்ச்சலால் - நாளாந்தம் பலர் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைக்கு செல்கிறார்கள். அந்தநோய் 'சிக்குன் குனியா' காய்ச்சலாக இருக்கக்கூடும் எனச் சந்தேகிக்கப்பட்டபோதிலும், அதனை உறுதிசெய்வதற்கான வைத்திய ஆய்வு மற்றும் சிகிச்சைவசதிகள் இலங்கையில் இல்லாததால் இனங்காணமுடியவில்லை.**

**இந்நோய் தமிழ்நாட்டில் வேகமாகப் பரவி பல உயிரிழப்புகளை உண்டாக்கிவருகிறது. 'சிக்குன் குனியா' தமிழகத்துக்கு மிக அருகில் - குறுகிய தூரஇடைவெளியில் - உள்ள மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய வடபிரதேசங்களுக்குப் பரவலாம் என்ற சந்தேகம் நிலவுகிறது.**

**'சிக்குன் குனியா' உயிர்க்கொல்லி நோய் குறித்து விரிவாக ஆராய்கிறது இக்கட்டுரை.**

'சிக்குன் குனியா' என்னும் தொற்றுநோயானது ஒப்பீட்டளவில் அரிதாக ஏற்படுகின்ற பொதுவாக இறப்பை ஏற்படுத்தாத அநேகமாக ஒருவருக்கே மட்டுப்படுத்தப்பட்ட (**Self Limited**) ஒரு வைரஸ் காய்ச்சலாகும் (**Viral Fever**). இந்நோயானது முதன்முதலாக 1955 ஆம் ஆண்டு மேரியன் றொபின்சன் (**Marion Robinson**) மற்றும் லும்ஸ்டென் (**W.H.R. Lumsden**) ஆகியோரால் கண்டறியப்பட்டது. எனினும், 1952 ஆம் ஆண்டு ஆபிரிக்க நாடுகளில் இதன் எழுச்சி (**Out break**) உணரப்பட்டுள்ளது. அதன்பின்பு 1999 ஆம் ஆண்டு மலேசியாவிலும் தற்போது இந்தியாவிலும் திடீரென்று தோன்றிப் பரவுகின்றது.

### நுளம்புகளே நோய்க்காவிகள்

இந்த நோய்க்காரணியான வைரசுகள் அல்பா (**alpha**) வகையைச் சேர்ந்தவையாகும். நியூக் கிளிக்கமிலம் **RNA (Ribo Nuclic Acid)** இனைக் கொண்டுள்ளன. இவ்வைரசுத் தொற்றுக்குள்ளான நுளம்புகள் கடிப்பதனால் நோய்க்காரணி ஒருவரில் இருந்து இன்னொருவருக்குப் பரவுகின்றது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் (**WHO**) அறிக்கையின்படி இந்நோயினது தாக்கம் ஆபிரிக்கா, தென்கிழக்கு ஆசியா, இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் உணரப்படுகின்றது. விசேடமாக இந்த நோயானது பிரதானமாக மழை காலங்களிலேயே ஏற்படுகின்றது. இதற்கான பிரதான காரணம் மழைகாலங்களில் நோய்க்காவிகளான (**Disease vectors**) நுளம்புகளின் பெருக்கம் அதிகரிப்பதேயாகும்.

2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் இந்நோயானது இந்துசமுத்திர தீவுகளில் திடீரெனத்தோன்றி பரவுகின்றது.(**Out break**)முக்கியமாக இந்தியாவைத் தாக்கி கணிசமான உயிரிழப்புகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றது. இதுவரை ஏறத்தாழ நாநூறு வரையானவர்களைக் காவுகொண்டுள்ளது. இவற்றில் இருநூற்று முப்பதிற்கும் மேற்பட்டோர் தமிழ்நாட்டிலும் நூறிற்கு மேற்பட்டோர் கேரளாவிலும் மட்டும் கொல்லப்பட்டுள்ளனர் எனக் கூறப்படுகின்றது. எனினும், உத்தியோகபூர்வமாக சரியானதொகை எந்த சுகாதார நிறுவனங்களாலும் இதுவரை வெளியிடப்படவில்லை. இந்நோய்க்காரணியான வைரசானது இந்நாடுகளூடாக பயணிப்போரூடாக உலகின் வெப்ப வலய நாடுகளிற்கும் (**Tropical Countries**)



உப வெப்பவலய (**Sub-Tropical**) நாடுகளிற்கும் பரவலாம் என ஊகிக்கப்படுகின்றபோதும் தொற்றுக்குள்ளான நுளம்பு கடிக்காது தடுப்பதன் மூலம் அதனைக் கட்டுப்படுத்த முடியும் எனவும் கருதப்படுகின்றது.

இதுவரை நோய்க்காரணியான வைரசைக் கட்டுப்படுத்துவதற்கானமருந்துவகைகள் எதுவும் கண்டுபிடிக்கப்படாத நிலையில் நோய்காவிகளான நுளம்புகளைக் கட்டுப்படுத்துவதும், அவை கடிப்பதிலிருந்து தடுப்பதுமே முக்கியத்துவம் பெறுகின்றது. எனவே காவிகளான நுளம்பின் அழிவும், அவற்றின் பெருக்கத்தைத் தடுத்தலுமே அவசியமானதாகின்றது. உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிக்கையின்படி ஈடிஸ் எயிப்ரை(***Aedes-aegypti***) நுளம்பு வகையே பிரதான நோய்க்காவியாக காணப்படுகின்றது என்றும், வேறுவகையான நுளம்பு வகைகளும் இந்நோயைக் கடத்தக் கூடியனவாக இருக்கலாம் எனவும் கூறப்படுகிறது. எனினும் அண்மைகால ஆய்வுகளின்படி ஈடிஸ்(***Aedes***)மற்றும் கியூலெக்ஸ்(***Culex***) வகையான நுளம்புகளும் இந்நோய்க் காரணியைக் காவுவதாக அறியப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் நோய்க் காரணி ஈடிஸ் எஜிப்ரை (***Ae. aegypti***) வகையான நுளம்புகளால் காவப்பட்டது என்றும் பின்னர் நோய்காரணியாக அல்பா வைரஸில் ஏற்பட்ட விகாரம் (**Mutation**) காரணமாக ஈடிஸ் அல்போபிக்ரஸ்(***Ae. albopictus/Tiger mosquito***) வகை நுளம்புகளினாலும் கடத்தப்படுவது ஆராய்ச்சிகள் மூலம் அறியப்பட்டுள்ளது. பிரதான காவிகள் எனக் கருதப்படுகின்ற ஈடிஸ் வகை நுளம்புகள் கறுப்பு நிறமுடையவை, உடல் பகுதிகள் மற்றும் கால்களில் வெண்ணிற வளையங்களை(**White bands**) கொண்டுள்ளன. இவை பொதுவாக பகல் வேளையிலேயே கடிக்கின்றன.

### நோய் அறிகுறிகள்

உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கையின்படி பொதுவாக இந்த நோய் அறிகுறிகள் உணரப்படுவது, ஒருவர் தொற்றுக்குள்ளான நுளம்பு கடித்து நான்கு தொடக்கம் ஏழுநாள்களுக்கிடையிலாகும். பொதுவான மற்றும் பிரதானமான நோய் அறிகுறிகளாகத் திடீரென ஏற்படும் உயர்வான காய்ச்சல், இதன் காரணமாக உடல் வெப்பநிலை 39°C(102.2°F) வரை உயருதல், தலையிடி ஏற்படுதல், மூட்டுக்களில் நோ பொதுவாக மணிக்கட்டு, கணுக்கால் பகுதிகள், நடுக்கம் (**Chills**), வாந்தியெடுக்கவேண்டும் என்ற உணர்வு (**Nausea**),அருவருப்பு, வாந்தி, கீழ்ப்புற முதுகுநோ (**Low back Pain**) மற்றும் உடல்பகுதி,கை, கால் போன்ற இடங்களில சொறிவு ஏற்படுதல் என்பனவாகும். எனவே குருதிப்பெருக்குத் தவிர அநேகமான இந்நோய்குரிய அறிகுறிகள் டெங்கு நோய்க்குரிய அறிகுறிகளைப் பெரிதும் ஒத்ததாகவே இருக்கும் எனக் கூறப்படுகின்றது.

## வந்தபின் சிகிச்சையளிப்பதை விட வருமுன் காப்பதே சிறந்தது

எனினும் தற்போது இந்தியாவில் ஏற்பட்டுள்ள இந்த நோய் தொடர்பாக மேலும் சில அறிகுறிகள் இந்திய வைத்தியர்களால் வெளியிடப்பட்டுள்ளன. தோற்பகுதியில் தடிப்பான சொறிவு (**Maculo Papular rash**), நாசிக் குழியில் இரத்தக் குழாய்கள் ஒன்று சேர்வதால் கட்டி அல்லது கொப்புளங்கள் உருவாதல்(**Nasal blotchy erythema**) நடு முகப்பகுதியில் மெலனின் நிறப் பொருள்கள் ஒன்று சேர்வதால் நிறமேற்படுதல் (**Freckle-Like pigmentation over centro Facial area**), சூரிய ஒளி படுகிற உடற்பகுதிகளில் தடித்த கடினமான சொறிவை ஏற்படுத்தும் அதிநிறமூட்டல் ஏற்படல்(**Lichenoid eruption and hyper pigmentation in photodistributed areas**), விதைப்பையின் மேல்புறம் பல வெண்ணிற அல்லது சிவந்த சீழ்பிடித்த புண்கள்(**Multiple aphthous-like ulcers over scrotuma**), குழந்தைகளின் தோலில் சிவப்பு நிற அல்லது ஊதா நிறப் புள்ளிகள் தோன்றுதல்(**Multiple ecchymotic spots**), நகங்களுக்கு கீழ்ப்புறமாக இரத்தக்கசிவு (**Subungual hemorrhage**) மற்றும் சூரிய ஒளி படுகிற உடல், கை மற்றும் கால் பகுதிகளில் ஒளிபுகவிடும் தோற்றம்கொண்ட உயர்ந்த அடையாளங்கள் தோன்றுதல்(**Photo Urticaria/Acral-Urticaria**) என்பனவாகும். எனவே, இவ்வாறான அறிகுறிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட அறிகுறிகள் [illegible] மிகவும் அவதானமாக [illegible] படுமிடத்து வைத்தியரை நாடுவதும் எமது பிரதேசத்தில் இக்கொடிய நோய் பரவுவதைத் தடுக்க உதவும்.

### யாழ்.குடாநாட்டை இந்நோய் தாக்குமா?

இவ்வாறான அறிகுறிகளைக் கொண்ட பாரிய உயிர்ச் சேதங்களை ஏற்படுத்துகின்ற இந்நோய் யாழ். குடாநாட்டைத் தாக்குமா என்பதே தற்போது எம்மத்தியிலுள்ள அச்சமாகும். விசேடமான மருத்துவ சிகிச்சை முறைகள் எதுவுமற்ற இந்நோய் வருமுன் காப்பதே சிறந்த வழியாகும். இதற்கு ஒரேவழி இதன் காவிகளான நுளம்பை கட்டுப்படுத்துவதாகும். இல்லையேல் இந் நோய்க்காரணியான இந்த வைரஸ் தொற்று தற்செயலாக ஏற்படுமானால் அது விரைவாக பரவலடைந்து பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

ஏனெனில், 2005 மற்றும் 2006 ஆம் ஆண்டின் முதல் பகுதியில் யாழ். பல்கலைக் கழக விலங்கியற்துறையினரால் நடத்தப்பட்ட ஆய்வின் விளைவாக யாழ். நகரப்பகுதியிலும், நகரை அண்டிய பகுதியிலும் ஈடிஸ் அல்பொபிக்ரஸ், ஈடிஸ் எஜிப்ரை ஆகிய இரண்டு ஈடிஸ் இனங்களும் அதிகளவில் பெருக்கமடைவது கண்டறியப்பட்டுள்ளது. இவற்றில் ஈடிஸ் எஜிப்ரை பொதுவாக நகரப்புறங்களுக்குரியதாகவும், ஈடிஸ் அல்பொபிக்ரஸ் பொதுவாக கிராமப்புறங்களுக்கு உரியதாக காணப்பட்ட போதிலும் குறிப்பிட்ட ஆராய்ச்சிக் காலங்களில் இரண்டு வகையான இனங்களும் ஏறத்தாழ சமமான விகிதாசாரத்தில் பரவியிருப்பது கண்டறியப்பட்டுளளது.

அத்துடன், கியூ லெக்ஸ் வகை நுளம்புகளும் அதிகளவில் உள்ளமை அறியப்பட்டுள்ளது. எனவே, எந்த வகையான நோய்க் காரணியான வைரசின் (விகாரமடைந்த/ விகாரமடையாத) தொற்று தற்செயலாக ஏற்பட்டாலும் அதுவிரைவாகப் பரவலடைந்து அதிக பாதிப்பை ஏற்படுத்தும் சாத்தியக்கூறு அதிகமாகவே காணப்படுகின்றது.

### நுளம்புப் பெருக்கத்தைத் தடுக்கும் வழி

எனினும், காவிபெருகும் இடங்களான பிளாஸ்ரிக் பொருள்கள், ரயர்கள், பூச்சாடிகள், கூரைப்பீலிகள், தண்ணீர்த் தொட்டிகள் மற்றும் நீர் தேங்கிநிற்கக்கூடிய இடங்களில் நீர் தேங்கிநிற்காது தடுப்பதன் மூலமாகவோ அல்லது அவற்றை அகற்றுவதன் மூலமாகவோ காவிகளைக் கட்டுப்படுத்துவதன் மூலமாகவும் நுளம்புகடித்தலை தனிநபர் பாதுகாப்பு முறைகளான (**Self Protection Methods**) நுளம்பு வலைகளைப் பயன்படுத்துதல், நுளம்புத்திரிகளை பயன்படுத்துதல்,புகையூட்டுதல் மற்றும் நீளமான காற்சட்டை,மேற்சட்டை என்பவற்றை அணிவதன் மூலமாக தடுப்பதன் மூலமாகவும் கட்டுப்படுத்த முடியும்.

நடத்தப்பட்ட ஆய்வுகளின்படி குடாநாட்டு மக்களைப்பொறுத்தளவில் நுளம்புத்திரிகளும், நுளம்புவலைகளுமே நுளம்புக்கடிக்கு எதிரான பிரதானமான தனிநபர் பாதுகாப்பு முறையாக காணப்படுகின்றன. எனினும் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக நுளம்புத்திரி, நுளம்புவலைகளிற்கு குடாநாட்டில் பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது. இதன் காரணமாக தொற்று ஏற்பட்டால் அதனைக் கட்டுப்படுத்துவது மிகவும் கடினமான தொன்றாகவே இருக்கும் என்பதால் காவிகளின் பெருக்கத்தை கட்டுப்படுத்துவது மிகமுக்கியமாக [illegible]றது.

இந்தியாவில் பரவுகின்ற நோய் நிச்சயம் இலங்கையிலும், குறிப்பாக வடபகுதியில் பரவுமா? என நாம் எண்ணிக்கொள்ளலாம். எனவே நிச்சயம் என்று கூறமுடியாது. ஆனால், இதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன என்பதே கூற வேண்டியுள்ளது. ஏனெனில் அண்மைக்காலமாக வடபகுதியில் தாக்கத்தை ஏற்படுத்தும் லீஸ்மனையாஸிஸ் (**Leishmaniasis**) எனும் நோய் நீண்டகாலமாகவே இந்தியாவில் காணப்பட்டது என்றும் அண்மைக்காலமாகவே அதன் தாக்கம் இங்கு உணரப்பட்டுள்ளது.

இதனை உலக சுகாதார ஸ்தாபனமும் உறுதிப்படுத்தியுள்ளது. இருப்பினும், இந்த நோய்க் காவிகளான 'மணல் ஈ'(**sand fly**) 1942ஆம் ஆண்டே நெடுந்தீவில் (**Delft**) இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. எனவே, 'சிக்குன் குனியா' நோய்க் காவிகளாக கருதப்படும் நுளம்புகள் எமது பகுதிகளில் அதிகளவில் காணப்படுவதனால் இந்நோய் உடனடியாக இல்லாவிட்டாலும் பரவுவதற்கான ஆபத்துள்ளதாகவே எண்ண வேண்டியுள்ளது. இதிலும் விசேடமாக இந்நோய்த்தாக்கம் மழைகாலத்தைத் தொடர்ந்து அதிகளவான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இதற்குச் சிறந்த உதாரணமாக 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இந்தியாவில் இராஜஸ்தான் மாநிலத்தில் மழையை அடுத்து ஆயிரம் பேர் வரையானோர் இந்நோய் அறிகுறியுடன் அடையாளப்படுத்தப்பட்டனர். எனவே, குடாநாட்டிலும் தற்போது மழை காலம் ஆரம்பித்திருப்பதால் நாம் இந்நோய் தொடர்பாக அதிகளவு விழிப்புடன் இருக்கவேண்டும்

தமிழ்நாட்டில'சிக்குன் குனியா' வைரஸ் பரவும் நுளம்புகள் ஒரே சமயத்தில் இரண்டாவது வகையான டெங்கு வைரஸ் பரவுவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லையென்று சுகாதார வல்லுநர்கள் பரவலாகக் கருதுகின்றனர். அண்மைக்காலத்தில் இலங்கையின் தென்பகுதியிலும், மத்திய மலைநாட்டிலும் குறிப்பாக கண்டிபோன்ற இடங்களிலும் கணிசமான அளவு டெங்கு நோயாளர்கள் அடையாளப் படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் இறப்புகளும் ஏற்பட்டுள்ளன. அண்மையில் திருநெல்வேலிப் பகுதியில் குறிப்பாக யாழ். பல்கலைக்கழகத்தை அண்டிய பகுதியில் டெங்கு நோய்க்குரிய அறிகுறியுடன் சிலர் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். எனவே இரண்டு வைரஸை காவும் தன்மை ஒருவகையான நுளம்புக்கு இல்லை என்னும் கருத்து உண்மையெனின், எமது பிரதேசங்களில் இந்நோய்த் தாக்கத்திற்கான சாத்தியக் கூறு குறைவாக இருந்தாலும் ஈடிஸ் நுளம்புகளில் வேறுபட்ட இரண்டு இனங்கள் குடாநாட்டில் இருப்பதால் இது தொடர்பாக ஒரு தீர்க்கமான முடிவிற்கு வரமுடியாது. இது தவிர 'டெங்கு', 'சிக்குன் குனியா' போன்ற நோய்களை நுளம்புகள் காவும் தன்மை கொண்டுள்ளன. எனவே நுளம்[illegible] "எய்ட்ஸ்" (**AIDS**) வைரஸினை பரப்[illegible] ஆபத்தும் ஏற்பட்டுள்ளதாக துறைசா[illegible] நிபுணர்குழுக்கள் எச்சரிக்கை விடுத்திருப்ப[illegible]கவும் [illegible]டுக்கிடும் தகவல்கள் வெளியாகியு[illegible]ளன.

'சிக்குன் குனியா' நோயானது இந்தியாவில் அதிகளவு இறப்பை ஏற்படுத்தியுள்ளதற்கான காரணம் உடல் வெப்பநிலை அதிகளவு அதிகரிப்பதை கருத்திலெடுக்காத மக்களின் கவலையீனமும், நோய்க்கு உடனடி சிகிச்சை பெறாததும் அவர்களின் பொருளாதார நிலையுமே ஆகும். இந்த நோயைக் குணப்படுத்துவதற்கு விசேடமாக எந்தத் தடுப்புமருந்தும் (**Vaccine**) இதுவரை அறியப்படாதிருப்பதும் சாதாரண பக்ரீரியா தாக்கத்திற்கு எதிராகப் பயன்படுத்தப்படும் பக்ரீரியா எதிர்ப்பு மருந்துகளே (**Antibiotics**) பயன்படுத்துவதும் பிறிதொரு காரணமாகும்.

எனவே முழுமையான மருத்துவம் 'ஒத்தியல்' எனப்படும் 'ஹோமியோபதி' மருத்துவத்திலேயே உள்ளது எனவும், இது நோயின் தன்மை, நோயாளியின் மனநிலைஎன்பவற்றிற்கேற்ப வழங்கப்படுகின்றது எனவும் இந்தியாவிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உடல் வலிமையாக இருத்தலும் நோய் எதிர்ப்பு சக்தியும் (**Immunity**)நோயவராமல் தடுக்கின்றது என்றும், செயற்கைப்பசளை, பூச்சி கொல்லிகள் என்பவற்றினால் உடலில் சேரும் நச்சுத்தன்மையும் நோய்க்கு காரணமாகின்றது எனவும் கருதப்படுகின்றது. இதன் காரணமாகவே கேரள மாநிலத்தில் 'சிக்குன் குனியா'வால் இறந்தவர்களில் 70 சதவீதமானோர் 60வயதை தாண்டியவர்கள் என[illegible] எனவேதான் நோய் தொற்றிற்கும் நோய் எதிர்ப்பு சக்திக்குமிடையே உள்ள தொடர்பு பற்றி ச[illegible]தேகம் கொண்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. ✱

ஏ.கஜதீபன்
(விலங்கியல்துறை சிறப்புமாணவன்,
யாழ்.பல்கலைக்கழகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட Brown Paper bag மலிவு விலையில்

சகல அளவுகளிலும் Brown Paper bag மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள...

ஸ்ரீலங்கா புத்தகசாலை,
தொ.பே 222 2573 இல.234, கே.கே.எஸ் வீதி,
(சி/51301) யாழ்ப்பாணம்



## விற்பனைக்கு

7.5 Kw லிஸ்ரர் ஜெனரேற்றர், Honda EP 2500 ஜெனரேற்றரும், றொபின் 20 நீர் இறைக்கும் இயந்திரமும் விற்பனைக்குண்டு.

மூர்த்தி
63/18, சிவன் வீதி, பரவைக்குளம்,
திருநெல்வேலி.



## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்து 1973 இல் பிறந்த 5'3'' உயர செவ்வாய் குற்றமற்ற (22 பாவம்) கனடாவில் Computer Engineer (Cisco Certified internet Expert) ஆக தொழில் புரியும் மணமகனிற்கு வெள்ளை அழகான பட்டதாரி மணமகள் தேவை.

தொடர்பு: தொ.பே.இல. 021 222 2168



## வெளிவருகின்றது

யாழ். பிரபல மருத்துவக் குடும்பத்தின் உன்னத படைப்பு

**பரஞ்சோதியம்**
*மருத்துவ மாத இதழ்*

அறிமுக இதழ் நவம்பர் 20 ஆம் திகதி வெளிவருகிறது என்பதை சந்தாதாரர்களுக்கும், வாசகர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

சந்தாதாரராக விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

PMC 54/B, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.


# மரண அறிவித்தல்கள்

## குமாரசுவாமி கமலகுமார் (கண்ணன்)



*(முன்னாள் கணக்காய்வாளர் இ.போ.ச யாழ்ப்பாணம், நிதிமுகாமையாளர்- வவுனியா மக்கள் போக்குவரத்துச் சபை)*

பொன்னையா வளவு ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கு.கமலகுமார் 09.11.2006 வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி குமாரசுவாமியின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற திரு.திருமதி. கந்தசாமியின் மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், ஹரேந்திரன்(கனடா), தர்சினி(கனடா), பிரதாபன்(சுவிற்ஸர்லாந்து), ஜனார்த்தனன்(ஆஸ்திரேலியா), தாரிணி(கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்ரீகலா(கனடா), ஜோர்ஜ் விஜயகுமார்(கனடா), கவிதா(சுவிற்ஸர்லாந்து), அனுஷா(ஆஸ்திரேலியா), கதிர்காந்தன்(கனடா), ஆகியோரின் மாமனும், ஆகாஷ் (கனடா), தீப்தி (கனடா), பிரணவ்(கனடா), ஹம்ஸத்(சுவிற்ஸர்லாந்து), ஈத்தன்(கனடா), ஆகியோரின் பேரனும் உதயகுமார், பிரேம்குமார்(கனடா), ஜெயகுமாரி, காலஞ்சென்ற பாலகுமார், ராஜகுமார் (கனடா), விஜயகுமார்(கனடா) ஆகியோரின் அருமைச் சகோதரரும், ஜோசி(கனடா), ஆலாலசுந்தரம், காலஞ்சென்ற அற்புதரஞ்சிதம், நளினி(கனடா), லியனோரா(கனடா), காலஞ்சென்ற திருநாவுக்கரசு, திருஞானசம்பந்தர்(ஆஸ்திரேலியா), தயாவதி (கனடா) ஆகியோரின் மைத்துனரும், ரஞ்சித்குமார், பிரியதர்சினி(கனடா), சுரேஸ்குமார் (கனடா), கிறிஸ்(கனடா), றூபி(கனடா) ஆகியோரின் பெரியதந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் 11.11.2006 கனடாவில் நடைபெற்றன.

பொன்னையாவளவு,
பொன்னையா ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.

தகவல்:
கு. உதயகுமார்
(சகோதரர்)

## வைரமுத்து- திருஞானலிங்கம் (துரைசாமி)

**(ACTING RESIDENT REPRESENTATIVE, INGRA COUNSTUCTOR YUGOSLAVIA)**

சுதுமலையை பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து திருஞானலிங்கம் நேற்று (11.11.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சுதுமலையை சேர்ந்த காலஞ் சென்ற வைரமுத்து - தங்கம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும் கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற பொன்னுச்சாமி-கண்மணியின் மருமகனும் காலஞ்சென்ற அன்னபாக்கியத்தின்(ஈஸ்வரி) அன்புக்கணவரும், பிரதாபன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், யாழ். மாநகர சபை, திட்டமிடல் பிரிவு), லிங்கேஸ்வரி(ஆசிரியை, கொக்குவில் இந்துக் கல்லூரி), சக்தி (முன்னாள் கணக்காய்வுத் திணைக்களம், கொழும்பு, தற்போது கனடா), புருசோத்தமன் (மஸ்கன்ஸ், கொழும்பு), ஆகியோரின் பாசமிகு தந்தையும், குணேஸ்வரி, வைத்தியகுமார்(பதிவாளர், யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி), சுந்தரலிங்கம்(கனடா), பிறேமினி(ஆசிரியை, இரத்மலானை இந்துக்கல்லூரி), ஆகியோரின் பாசமிகு மாமனும், அபர்ணா(Programme Executive, M.T.V (PVT LTD), மீரா(கொழும்பு), குருபரன் (கொக்குவில் இந்துக்கல்லூரி), சூரியப்பிரகாஷ்(கொக்குவில் இந்துக்கல்லூரி), நிருத்திகா(கனடா), சாரதாம்பிகா (கனடா), துவாரகா(கொழும்பு), சங்கவி(கொழும்பு) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற திருமதி பொன்னுத்துரை-பார்வதிப்பிள்ளை, சிவஞானலிங்கம் (லண்டன்), சுந்தரலிங்கம் (அமெரிக்கா), காலஞ்சென்ற இராமலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் அவரின் இல்லத்தில் இன்று (12.11.2006) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இல. 21, ஸ்ரேசன் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
பிரதாபன் (மகன்- யாழ். மாநகர சபை திட்டமிடல் பிரிவு).
வைத்தியகுமார் (மருமகன்- யாழ். தேசிய கல்வியற் கல்லூரி)

# சிறுவர்களுக்கு கல்வி உதவி

யாழ்ப்பாணம், நவ.12

சிறுவருக்கான அபிவிருத்தி நிலையத்திடமிருந்து கல்வி உதவி பெறும் சிறுவர்களுக்கான உதவிகள் இம்மாத இறுதியில் வழங்கப்படவுள்ளன என்று நிலையத்தின் ஒருங்கிணைப்புச் செயலாளர் ரி.பி. ஆனந்தன் தெரிவித்தார்.

நிறுவனத்திடம் நேரடியாக உதவி பெறும் சிறுவர்கள் இம்மாத இறுதியில் நிலையத்தில் வந்து தமக்குரிய உதவியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் -

வேறு தொண்டர் நிறுவனங்கள் ஊடாகப் பெறுபவர்கள் அந்தந்த நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளமுடியும் என்றும்- அவர் மேலும் கேட்டுள்ளார். (202)

## வெற்றுச் சாக்கு, வெற்று உரப்பை விற்பனைக்கான மீள் கேள்வி

*எமது சங்கத்தில் பாவனைக்குரிய வெற்றுச்சாக்கு, வெற்று உரப்பைக்கு மீள் கேள்வி கோரப்படுகின்றது.*

*வெற்றுச் சாக்கு - 5100*
*வெற்று உரப்பை - 5800*

கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித் திகதி :
20.11.2006 திங்கட்கிழமை நண்பகல் 12 மணிவரை

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:
23.11.2006 வியாழக்கிழமை நண்பகல் 12 மணிவரை

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி:
24.11.2006 வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி

*கேள்விப்பத்திரத்தை மீளளிக்க முடியா... வைப்புப்பணமாக ரூபா 100.00 செலுத்தி அலுவலகத்தில் பெற்று... ளலாம்.*

தலைவர்,
(சி/51309) யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து),
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.

## 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

உயிர்ப்பு 06 - 11 - 1959



அழிப்பு 15 . 08 . 2006

## சாம்பசிவம் பாஸ்கரன்

(பத்திரிகை விநியோகஸ்தர், சுடர் ஒளி-உதயன் பத்திரிகை நிறுவனம்)

*நேசமான அப்பாவே ஆசையாய்*
*பாசமாய் 'பரசு' வென அழைத்தோமே!*
*வாசமாய் வீசிய எம் வாழ்வினின்று*
*மோசமாய் பாதைதனில் பலியாகி - இத்*
*தேசத்தில் நாம் வாழும்வரை மீளாத்துயரில்*
*ஆழ்த்தி விட்டு எங்கு சென்றீரோ!!*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*புத்தூரில் அகால மரணமான அன்னாரின் இறுதி நிகழ்வுகளில் கலந்து கொண்டோருக்கும், அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் இடர் நேரத்தில் அயராது அனைத்து உதவிகளைச் செய்தோருக்கும் செய்வோருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு எமது இல்லத்தில் இன்று (12.11.2006) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.*

நாச்சிமார் கோயிலடி,
மதவடி ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (சி-51306)

மனைவி, பிள்ளைகள்,
பெற்றோர் மற்றும் சகோதர சகோதரிகளும் குடும்பத்தினரும்.


*யாழ். - கொழும்பு விமான சேவைகள் தனியார் நிறுவனத்தின் நான்கு பேர் பயணிக்கத்தக்க சிறு விமான சேவை உத்தரவாதத்துடன் நடைபெறுகிறது.*

தொடர்பு: 0785788811 - 0785325501
0114964994 - Fax: 0112721789



ADVENTIST INTERNATIONAL PRE - SCHOOL
ADMISSION - 2007

Applications are invited for admission to year 2007. age limit 3 to5. limited application forms are available. closing date 15.12.2006 . For further particulars please contact.

Director
Adventist International
Pre - School
850, Hospital Road,
Jaffna.
T.Phone: 021 222 2843



**IBMS**

புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு I : 19.11.2006
பிரிவு II : 20.11.2006
காலை 10.00 மணி

Head Office : # 209, Manipay Road,
Vaitheeswara Junction,
Jaffna.

Branches : • NMM Road, Nelliady
• Sangarththanai
- Chavakachcheri


# கண்ணீர் அஞ்சலி

*எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி லிங்கேஸ்வரி வைத்தியகுமார் அவர்களின் பாசமிகு தந்தை*

## வைரமுத்து- திருஞானலிங்கம்

*அவர்கள் இறைபதம் அடைந்தமையை அறிந்து மனம் வருந்துகிறோம்.*

*அமரரின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திப்பதோடு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.*

(55148)

*ஆசிரியர் கழகம்,*
*கொக்குவில் இந்துக்கல்லூரி.*

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கைலாசபிள்ளை வடிவாம்பிகை



பண்ணாகத்தைச் சேர்ந்தவரும் அண்மைக் காலமாக இங்கிலாந்தில் வசித்தவருமாகிய வடிவாம்பிகை லண்டனில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் அமரர் டாக்டர் கைலாசபிள்ளையின் மனைவியும் டாக்டர் சிறீரஞ்சன் (தெஹிவளை, சென்ரல் மெடிக்கல் கிளினிக்), உமா (இங்கிலாந்து), சந்திரமோகன் (ஆஸ்திரேலியா), அமரர் பராபரி, ஹரிகரன் (இங்கிலாந்து), கௌரி (கனடா), மைதிலி (இங்கிலாந்து), ராகினி (இங்கிலாந்து), ரோகினி (ஆஸ்திரேலியா), ரதி (இங்கிலாந்து) ஆகியோரின் அன்னையும் விமலராணி, பாஸ்கரமூர்த்தி, கோமதி, சிவயோகினி, புண்ணியமூர்த்தி, தர்மகுலசிங்கம், சிவகுமார், திருநீலகண்டன், நித்தியானந்தன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.11.2006) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி/51307)

தகவல்:
NITHIYANANTHAN RATHY,
16, MILION CRESCENT,
GANTS HILL,
IL FORD, ESSEX 1 G2 6 D
UNITED KINGDOM.
Telephone: 0044 2085183668

## திருமதி செல்லம்மா கனகசபை

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், வெள்ளைவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி கனசபை செல்லம்மா 09.11.2006 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபையின் (C.G.R) அன்பு மனைவியும் காலஞ்சென்ற திரு. திருமதி நாகலிங்கம் தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற செல்லப்பாவின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற திரு திருமதி செல்லையா தம்பதியரின் மருமகளும் மதி, கௌரி, காலஞ்சென்ற சுதன் ஆகியோரின் தாயும் சர்வேஸ்வரனின் மாமியும் ஞானலிங்கம், ஞானாம்பிகை ஆகியோரின் அத்தையும் ரமாவின் பாட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் ஞாயிறு காலை 8 மணியிலிருந்து கல்கிஸை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, பி.ப 2 மணியளவில் கல்கிஸை பொது மயானத்தில் இந்து முறைப்படி தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி-51308)

தகவல்:
மதி (மகள்)
2554779

# ஊர்காவற்றுறை பிரதேச சபை மீன் சந்தை, மரக்கறிச் சந்தை, மாட்டு இறைச்சிக்கடை என்பன குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2007

ஊர்காவற்றுறைப் பிரதேச எல்லைக்குள் இருக்கும் மீன் சந்தை, மரக்கறிச் சந்தை, மாட்டு இறைச்சிக் கடை என்பவை 01.01.2007 தொடக்கம் 31.12.2007 வரை குத்தகைக்கு வழங்கப்படவுள்ளன.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி 13.11.2006 தொடக்கம் 27.11.2006 வரை. கேள்விப்பத்திரம் 28.11.2006 ஆம் திகதி மு.ப 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே மு.ப 10.30 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும்.

மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் ஊர்காவற்றுறை பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | குத்தகை விவரம் | மாதாந்த வாடகை | கேள்விப்பத்திரப் பணம் (மீளளிக்கப்படாதது) +வற்வரி | கேள்விப்பத்திரப் பிணைப் பணம் (மீளளிக்கக்கூடியது) | ஆகக்குறைந்த கேள்வித் தொகை +வற்வரி |
|---|---|---|---|---|---|
| 01 | ஊர்காவற்றுறை மீன் சந்தை (சைக்கிள் பாக் உட்பட) | - | 500.00 | 5,000.00 | 125,000.00 |
| 02 | ஊர்காவற்றுறை மாட்டிறைச்சிக்கடை (இல.01) | 150.00 | 500.00 | 5,000.00 | 111,000.00 |
| 03 | ஊர்காவற்றுறை மாட்டிறைச்சிக்கடை (இல.02) | 150.00 | 500.00 | 5,000.00 | 111,000.00 |
| 04 | ஊர்காவற்றுறை மரக்கறிச் சந்தை | - | 500.00 | 5,000.00 | 90,000.00 |
| 05 | நாரந்தனை மீன் சந்தை | - | 500.00 | 1,250.00 | 30,000.00 |
| 06 | நாரந்தனை மாட்டிறைச்சிக் கடை | 150.00 | 500.00 | 5,000.00 | 75,000.00 |
| 07 | புளியங்கூடல் சந்தை | - | 500.00 | 1,000.00 | 20,000.00 |

ஊர்காவற்றுறை பிரதேச சபை,
ஊர்காவற்றுறை,
10.11.2006. (சி-51305)

ஏ.கணேசானந்தராசா
செயலாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பூநகரி மாற்றுப்பாதை யோசனை விடுதலைப் புலிகளால் நிராகரிப்பு

கிளிநொச்சி,நவ.12

ஏ-9 வீதிக்கு மாற்றீடாக ஸ்ரீலங்கா அரசினால் சிபார்சு செய்யப்பட்ட பூநகரி-கேரதீவு சங்குப்பிட்டி பாதை திறப்பு யோசனையை தமிழீழ விடுதலைப் புலிகள் நிராகரித்துள்ளனர்.

ஏ-9 வீதி மூடப்பட்டதையடுத்து மாற்றுப் பாதையாக கேரதீவு-சங்குப்பிட்டிப் பாதையைத் திறக்கலாம் என்ற யோசனையை அரசு இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் லார்ஸ்ஜொஹான் சொல்பர்க் மூலமாக முன்வைத்திருந்தது தெரிந்ததே.

இதனையடுத்து, கேரதீவு-சங்குப்பிட்டி பாதையின் நிலவரத்தை நேரில் விளக்குவதற்காகக் கண்காணிப்புக் குழுவினரை விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் அண்மையில் அங்கு அழைத்துச் சென்றிருந்ததும் -

அந்தவேளையில் இராணுவத்தினர் நடத்திய எறிகணைத் தாக்குதலிலிருந்து சமாதானச் செயலகப் பணிப்பாளரும், கண்காணிப்புக் குழுவின் பணிப்பாளரும் மயிரிழையில் உயிர்தப்பியமையும் தெரிந்ததே.

இந்நிலையில், மேற்படி மாற்று வீதி யோசனையைப் புலிகள் நிராகரித்துள்ளனர் என்று விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தெரிவித்துள்ளார்.

சங்குப்பிட்டி இறங்குதுறையானது ஸ்ரீலங்கா அரசின் இராணுவ நடவடிக்கைகளால் பாரிய சேதமடைந்துள்ளது. அதனைத் திருத்த 2 ஆண்டுகளாகும். எனவே, அதனை மாற்றுப் பாதையாகப் பயன்படுத்த முடியாது - என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (202)

## கரவெட்டியில் தாக்குதல், சிப்பாய் காயம்

உடுப்பிட்டி,நவ.12

கரவெட்டி மாலுசந்தியில் நேற்றுக்காலை 7.15 மணிக்கு இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றில் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

இரட்ணகுமார (வயது 25) என்ற சிப்பாயே காயமடைந்தவர் ஆவார்.

மாலுசந்தி வைரவர் கோயிலுக்குப் பின்னால் காவலில் ஈடுபட்டிருந்த சிப்பாய் மீதே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கையில் காயத்துக்குள்ளான இவர் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காகப் பலாலி வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

தாக்குதல் சம்பவத்தையடுத்து சுற்றுவட்டாரம் எங்கும் படையினர் பாரிய தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (202-155)

## நல்லூர் பிரதேச சபைப் பிரிவில் கிணறுகளுக்குக் குளோரின் இடும் பணி

யாழ்ப்பாணம்,நவ.12

நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பொதுக்கிணறுகள் மற்றும் வீட்டுக் கிணறுகளுக்கு இலவசமாகக் குளோரின் இடும் பணி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் பொ.வைரமுத்து தெரிவித்தார்.

இது குறித்து பிரதேச சபையின் செயலாளர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் தொற்றுநோய் பரவும் அபாயம் காணப்படுகின்றது. இதனால் தொற்றுநோய் பரவாமல் தடுக்க இலவசமாகக் குளோரின் இடும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தேவையான அளவு குளோரின் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

தமது கிணறுகளுக்குக் குளோரின் விட விரும்பும் வீட்டு உரிமையாளர்கள், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் தம்முடன் தொடர்புகொள்ள முடியும் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார். (79)

## டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு நல்லூரில் பல்வேறு செயற்றிட்டங்கள்

டெங்கு ஒழிப்பு வாரத்தை ஒட்டி நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட இடங்களில் பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

நாளை திங்கட்கிழமை கொக்குவில் உப அஞ்சல் அலுவலகத்திலும், நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை திருநெல்வேலி பாற்பண்ணைச் சூழலிலும், எதிர்வரும் புதன்கிழமை நந்தாவில் அம்பட்டப்பாலச் சுற்றாடலிலும்-

எதிர்வரும் வியாழக்கிழமை கோண்டாவில் நாராயணன் வீதி, வைத்தியசாலை வீதி மற்றும் காரைக்கால் வீதி ஆகியவற்றிலும், எதிர்வரும் வெள்ளிக்கிழமை கல்வியங்காடு செங்குந்தாவீதி மற்றும் இராமலிங்கம் வீதி ஆகியவற்றிலும் சிரமதானப் பணிகள் நடைபெறவுள்ளன, என்று பிரதேச சபையின் செயலாளர் அறிவித்துள்ளார். (202)



மக்கள் வங்கியின் வடவலய உதவிப் பொது முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்ற த.க.ஆனந்தராஜாவின் பதவியேற்பு வைபவத்தின்போது எடுக்கப்பட்ட படம். மலர்மாலை அணிவித்து அவர் வரவேற்கப்படுவதையும் அருகில் பதவியுயர்வு பெற்ற கிழக்குப் பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் து.ரகு, உதவிப் பிராந்திய முகாமையாளர் அ.குகதாசன் மற்றும் உத்தியோகத்தர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம். (202)

## காலபோக நெற்செய்கை

தொல்புரம் கமநலச் சேவை நிலையப் பிரிவில் இம்முறை ஆயிரத்து 493 ஹெக்டேயர் காணியில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதேவேளை - கீரிமலை கமநல சேவை நிலையப் பிரிவில் 420 ஹெக்டேயர் காணியில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (135)

# பால் மா எங்கே என்ற கேள்விக்கு பதில் தருகிறது ப.நோ.கூ. சங்கம்

*உதயன் பத்திரிகையில் (16.10.2006இல்) 'உங்கள் பிரச்சினையில் உதயன் (பளிச்)' என்ற பத்தியில் திருநெல்வேலி என விலாசமிடப்பட்டு ந.பரமேஸ்வரன் எழுதியதில் நல்லூர் ப.நோ.கூ. சங்கத்திலிருந்து பால்மா மறைந்தது எப்படி எனக் குறிப்பிட்டுள்ளார்.*

*ந.பரமேஸ்வரன் நல்லூர் ப.நோ.கூ. சங்கத்திற்கு வழங்கப்பட்ட தொகை வகை ரீதியாக எழுதியுள்ளார். இந்தொகை ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையின் ஒரு பகுதியே தவிர வழங்கிய தொகையல்ல. அதனை திரும்ப நாமும் ஞாபகப்படுத்த விரும்புகின்றோம்.*

| | |
|---|---|
| அங்கர் | - 180 பை |
| நெஸ்பிறே | - 1752 பை |
| நெஸ்ரமோல்ட் | - 1188 பை |
| டைமன் | - 4018 பை (ஒருகிலோ உட்பட) |
| ஹைலன்ட் | - 5918 பை |
| மொத்தம் | -13056 பை |

*08.10.2006 அன்று நல்லூர் ப.நோ.கூ. சங்கக் கிளைகளுக்கு பால்மா தவிர்ந்த ஏனைய உணவுப்பொருள்கள் அனுப்பிவைக்கப்பட்டன எனக் குறிப்பிட்டுள்ளார்.*

*08.10.2006இல் உரிய பால்மா முழுவதும் சங்கத்திற்கு வந்துசேரவில்லை. ந.பரமேஸ்வரன் கையில் வைத்திருந்ததாகக் குறிப்பிட்டுள்ள பட்டியல் எதுவோ எமக்குத் தெரியாது. சிலவேளை சங்கத்திற்குப் பால்மா ஒதுக்கீடு செய்யப்பட்ட பட்டியலாகவும் இருக்கலாம். இவ்விளக்கம் கிளை முகாமையாளரிடம்கேட்டுப் பிரயோசனம் இல்லை. தலைமைச் செயலகத்தில் பொது முகாமையாளராகிய என்னிடம் உரிய பட்டியலைக் காட்டி பால்மா எங்கே எனக் கேட்டிருப்பின் உரிய விளக்கத்தை நான் கொடுத்திருப்பேன். சங்கக் களஞ்சியத்திற்கு ஒரு தொகுதி பால்மா வந்த திகதி 6, 8, 11, 10-2006 (விவரப் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)*

*அந்தப் பத்தியின் முன்பகுதியில் பால் மா மறைந்தது என ந.பரமேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார். 13.10.2006 கிளைக்குப் பால்மா வந்து சேர்ந்தது என அக்கடிதத்திலேயே பின்பகுதியில் குறிப்பிட்டுள்ளார். இக்கூற்றின்படி பால் மா மறையவில்லை என்பதனை ந.பரமேஸ்வரன் ஏற்றுக்கொள்வாரா?*

*பாதுகாப்புக் கருதி பொருள்கள் பகுதி பகுதியாகத்தான் கிளைகளுக்கு அனுப்பப்படும். காலச்சூழ்நிலை அப்படி. யாழ். குடாநாட்டிலுள்ள பல சங்கங்களின் பல கிளைகள் அசாதாரண சூழ்நிலையில் உடைக்கப்பட்டதனை உதயன் பத்திரிகையும் அவ்வப்போது செய்திகளாக வெளியிட்டுள்ளது.*

*கிளைக்கு பால்மா வந்ததனை குறிப்பிட்டுள்ள ந.பரமேஸ்வரன் 14.10.2006, 11.30 மணிக்கு கிளைக்குப் போய் பால்மா கேட்டபோது கிளை முகாமையாளர் வந்த பால் மா முடிந்துவிட்டது. 'லக்ரோஜன்' மட்டுமே உள்ளது எனக் கூறியதாகக் குறிப்பிட்டுள்ளார்.*

*'லக்ரோஜன்' பால் மா இல்லையா? ந.பரமேஸ்வரன் விரும்பும் பால் மா எது?*

*தற்போதைய சூழ்நிலையில் பொருள்கள் வாங்க காலை 6 மணிமுதல் சங்கக் கிளை வாசலில் மக்கள் கூடுகிறார்கள். காலை 8.30 மணிக்குக் கிளைகள் திறக்கப்படும். 11.30 மணிவரை கிளை முகாமையாளர் ஒருவருக்கென்று பால்மா ஒதுக்கிவைக்க முடியாது.*

*10.10.2006 அன்று பொது முகாமையாளராகிய என்னிடம் வந்து பால்மா எப்போது கிளைகளுக்கு அனுப்பப் போகிறீர்கள் என்று கேட்டதற்கு நாளை அனுப்புவோம். அப்படி இல்லாதுவிட்டால் நீங்கள் இங்கே வாருங்கள் நான் தருகிறேன் என்று சொன்னதாகக் குறிப்பிட்டுள்ளார்.*

*கிளையில் 'லக்ரோஜன்' மட்டும் இருக்கு எனக் கிளை முகாமையாளர் கூறினால் இப்பால் மா ந.பரமேஸ்வரனுக்கு தேவையில்லாதுவிடின் ந.பரமேஸ்வரன் வாருங்கள் பால் மா தருகிறேன் என்று சொன்ன பொது முகாமையாளராகிய என்னிடம் வந்து நிலைமையைக் கூறி தான் விரும்பும் பால்மாவைத் தலைமைச் செயலகத்தில் பெற்றிருக்கலாம்.*

*ந.பரமேஸ்வரன் எழுதிய உதயன் பத்திரிகையில் பளிச் என்ற பகுதியைப் பார்த்து நாட்டில் உள்ள சில பொதுமக்கள் (நல்லூர் ப.நோ.கூ.சங்க நுகர்வோரைத் தவிர) வானொலிகள், ஊடகங்கள் 'பளிச்' செய்தியை முழுமையாக வாசிக்காமல் கருத்துக்கூற முற்பட்டுள்ளதுதான் வேதனைக்குரியது. இவர்கள் கருத்து 'குருடர் பார்த்த யானை போல்' உள்ளது.*

*நான் கூறும் விவரங்கள் திருப்தியில்லை எனக் கண்டால் நல்லூர் ப.நோ.கூ. சங்கத் தலைமைச் செயலகத்திற்கு வந்து பொறுப்பான உத்தியோகத்தருடன் தொடர்புகொண்டு ஆவணங்கள் வாரியாகத் தெரிந்துகொள்ளலாம்.*

*கட்டளை கிடைத்த திகதி: 09.10.2006*
*பால் மா கிடைத்த திகதி: 6, 8, 11, 15.10.2006*
*கிளைகளுக்கு விநியோகித்த திகதிகள் ரீதியாக 10, 11, 12, 13, 17.10.2006*

**11.10.2006இல் அரச களஞ்சியத்திலிருந்து பெற்றுக்கொண்ட பால்மா விவரம்**

| திகதி | லக்ரோஜன் I | லக்ரோஜன் II | அங்கர் | நெஸ்பிறே | அங்கர் NF | டைமன் 400கி | நெஸ்ரோ மோல்ட் | அங்கர் +1 | அங்கர் +3 | டைமன் 1kg | ஹைலன்ட் 400கி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 06.10.2006 | 1116 | 648 | 108 | 1764 | 72 | 1752 | 1188 | - | - | - | - | 6648 |
| 08.10.2006 | - | - | - | - | | - | - | 1620 | 648 | 350 | - | 2618 |
| 11.10.2006 | - | - | - | - | - | - | - | - | - | 1904 | - | 1904 |
| | 1116 | 648 | 108 | 1764 | 72 | 1752 | 1188 | 1620 | 648 | 2254 | | 11170 |

| | |
|---|---|
| அங்கர் +1 | 1620 |
| அங்கர் +1 | 648 |
| லக்ரோஜன் 1 | 1116 |
| லக்ரோஜன் 11 | 648 |
| மொத்தம் | 4032 |

| மீதி கிடைத்த திகதி | டைமன் | ஹைலன்ட் |
|---|---|---|
| 15.10.2006 [நாவற்குழி] | 685 | 5918 |

**குழந்தைப்பிள்ளை மா**

குழந்தைப்பிள்ளை மா உட்பட பெற்ற மா பைக்கற் 11170
குழந்தைப்பிள்ளை மா பை 4032
மீதி [illegible]

## ஆசிரியரின் குறிப்பு

*"பால் மா எங்கே? யாரிடம் முறையிடுவது?" 'உதயன் பளிச்' சம்பந்தமாக நல்லூர் ப.நோ.கூ. சங்கப் பொது முகாமையாளரின் விளக்கம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் சுட்டிக்காட்டப்பட வேண்டியவை ஆகும்.*

- ★ *பரமேஸ்வரன் மூன்று தடவை ப.நோ.கூ. சங்க அலுவலகத்திற்குச் சென்றதாகக் குறிப்பிட்டுள்ளார். பொது முகாமையாளர் இதனை மறுக்கவில்லை.*
- ★ *மறுநாள் தன்னிடம் வந்து 'லக்ரோஜன்' தேவையில்லை தனக்கு முழு ஆடைப்பால்மா தான் தேவையெனக் கூறியிருந்தால் தான் கொடுத்திருப்பேன் என பொது முகாமையாளர் குறிப்பிட்டுள்ளார். ஒரு பைக்கற் பால்மாவுக்கு நான்கு நாள் சங்கப் பணிமனைக்கு அலைய வேண்டுமென்றால், அவர் தமது தொழிலை விட்டு கூட்டுறவுச் சங்கக் கிளைகளுக்கு நாளாந்தம் அலைய வேண்டுமா?*
- ★ *'லக்ரோஜன்' பால் மா, பால் மா இல்லையா என்று பொது முகாமையாளர் கேள்வி எழுப்பியுள்ளார். ஆனால், இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் 'லக்ரோஜன்' குழந்தைகள் பால்மா எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.*
- ★ *பால்மா வந்து சேர்ந்தது என பரமேஸ்வரன் குறிப்பிட்டுள்ளதாகவும் பால்மா மறையவில்லை என்பதை பரமேஸ்வரன் ஏற்றுக்கொள்வாரா எனவும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. வந்து சேர்ந்த பால்மா எப்படி மூன்று மணித்தியாலங்களுக்குள் மறைந்தது என்றுதான் பரமேஸ்வரன் கேட்டிருந்தார்.*
- ★ *யாழ். செயலகத்தினால் ஒவ்வொரு சங்கத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட பால் மா பட்டியலின் பிரதியை பரமேஸ்வரன் உதயன் அலுவலகத்தில் கையளித்திருந்தார். ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கும் வழங்கப்பட்டதற்குமிடையே வேறுபாடு காணப்பட்டால் அதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தானே பதில் கூற வேண்டும். உதயனோ; திரு. பரமேஸ்வரனோ அல்ல.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.தென்மேற்குப் பிரதேச சபை, மானிப்பாய்
## 2007ஆம் ஆண்டிற்கான
## கேள்வி அறிவித்தல்

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், இறைச்சிக் கடைகள் என்பவற்றை 2007ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் 2007ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிவரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் 24.11.2006ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிவரை வலி.தென்மேற்குப் பிரதேச சபைத் தலைமைக் காரியாலயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று நண்பகல் 12 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியுட்பட இரு பிரதிகளைச் செயலாளர், வலி. தென்மேற்குப் பிரதேச சபை, மானிப்பாய் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். மூன்றாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் கீழ்க் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும் மீளளிக்கப்படக்கூடிய வைப்புப் பணமும் செலுத்திப் பிரதேச சபையின் உப அலுவலங்களில் (மானிப்பாய் பட்டினம், கிராமம், பண்டத்தரிப்பு பட்டினம், கிராமம்) 23.11.2006ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களைப் பெறுபவர்கள் தமது அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.

ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது. தெரிவுசெய்யப்படும் கேள்விதாரர் கேள்வித் தொகையின் ½ பகுதியை 01.12.2006ஆம் திகதிக்கு முன்னர் செலுத்திச் சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்துகொள்ளவேண்டும். எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ செயலாளருக்கு பூரண அதிகாரம் உண்டு. மேலதிக விவரங்களை அந்தந்த உப அலுவலகங்களில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

**குறிப்பு:** கேள்வித் தொகை, கேள்விப்பத்திரப்பணம், மாத வாடகை ஆகியவற்றிற்குப் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி 15% (**VAT**) சேர்த்து அறவிடப்படும்.

### 2007ஆம் ஆண்டிற்கான சந்தைகள், இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு விடுவதற்கான கணிப்பீடு

| சந்தைகள் (துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையங்களுடன்) இறைச்சிக்கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் (வற்வரி தவிர்ந்த) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த) | மாதவாடகை (வற்வரி தவிர்ந்த) |
|---|---|---|---|---|
| **மானிப்பாய் பட்டின உப அலுவலகம்** | | | | |
| 1.மானிப்பாய் பொதுச்சந்தை | 500.00 | 5,000.00 | 406,000.00 | - |
| 2.மானிப்பாய் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 5,000.00 | 190,000.00 | 400.00 |
| 3.மானிப்பாய் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1,500.00 | 32,500.00 | 300.00 |
| 4.மானிப்பாய் சந்தை கோழி இறைச்சிக்கடை | 500.00 | 1,500.00 | 27,500.00 | - |
| **மானிப்பாய் கிராம உப அலுவலகம்** | | | | |
| 1.காக்கைதீவுப் பொதுச்சந்தை | 500.00 | 1,500.00 | 18,000.00 | - |
| 2.நவலி பிரசாத் சந்தை | 500.00 | 2,000.00 | 85,000.00 | - |
| 3.சாவற்காட்டுச் சந்தை | 500.00 | 2,000.00 | 100,000.00 | - |
| 4.சண்டிலிப்பாய்ச் சந்தை | 500.00 | 2,000.00 | 60,000.00 | - |
| 5.நவாலி பிரசாத் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2,000.00 | 73,000.00 | 400.00 |
| 6.நவாலி பிரசாத் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1,500.00 | 30,000.00 | 300.00 |
| 7.நவாலி பிரசாத் சந்தை கோழிஇறைச்சிக்கடை | 500.00 | 1,500.00 | 11,000.00 | - |
| 8.ஆனைக்கோட்டைச் சந்தி மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 5,000.00 | 194,000.00 | - |
| 9.ஆனைக்கோட்டைச் சந்தி ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1,500.00 | 37,000.00 | - |
| **பண்டத்தரிப்பு பட்டின உபஅலுவலகம்** | | | | |
| 1.பண்டத்தரிப்பு பொதுச்சந்தை | 500.00 | 5,000.00 | 268,000.00 | - |
| 2.பண்டத்தரிப்புச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2,000.00 | 49,000.00 | 300.00 |
| 3.பண்டத்தரிப்புச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1,500.00 | 15,000.00 | 300.00 |
| 4.பண்டத்தரிப்புச் சந்தை கருவாட்டுக்கடை இல.1 | 500.00 | 1,500.00 | 7,500.00 | 250.00 |
| 5.பண்டத்தரிப்புச் சந்தை கருவாட்டுக்கடை இல.2 | 500.00 | 1,500.00 | 7,500.00 | 250.00 |
| **பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்** | | | | |
| 1. மாசியப்பிட்டி சந்தை | 500.00 | 2,000.00 | 86,900.00 | - |
| 2. இளவாலைச் சந்தை | 500.00 | 2,000.00 | 89,400.00 | - |
| 3.மாதகல் சந்தை | 500.00 | 2,000.00 | 60,650.00 | - |
| 4. மாசியப்பிட்டி சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 1,500.00 | 33,000.00 | 250.00 |
| 5. மாசியப்பிட்டி சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1,500.00 | 5,500.00 | 250.00 |
| 6. மாதகல் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 1,500.00 | 8,800.00 | 250.00 |
| 7.மாதகல் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1,500.00 | 5,500.00 | 250.00 |
| 8.இளவாலைச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2,000.00 | 63,750.00 | - |
| 9.பெரியவிளான் சந்தை | 500.00 | 1,500.00 | 5500.00 | - |

வலி.தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.
2006.11.10

(சி/51303)

செயலாளர்,
வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை, மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள்

தீவக வலய ஆசிரியர்களுக்கான ஆலோசனை வழிகாட்டல் செயலமர்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு யாழ். வைத்தீஸ்வராக்கல்லூரியில் நடைபெறவுள்ளன.

கணிதம், சமூகக் கல்வி, ஆங்கிலம், உடற்கல்வி ஆகிய பாடங்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்குகளே நடத்தப்படவுள்ளன.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை உரிய நேரத்திற்குச் சமுகமளிக்குமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ. ராஜேந்திரன் கேட்டுள்ளார். (203)

* * *

தரம் 6, 10இல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு கல்வி மறுசீரமைப்பு தொடர்பான கணித பாடச் செயலமர்வு நடைபெறுகின்றது.

இன்று ஞாயிற்றுக்கிழமை கோப்பாய்க் கோட்டக் கணித ஆசிரியர்களுக்கு கோப்பாய் ம.வியில் செயலமர்வு நடைபெறும் என யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் தெரிவித்துள்ளார். இதேவேளை, யாழ்ப்பாணம், நல்லூர் கோட்ட ஆசிரியர்களுக்கு நேற்று யாழ். இந்து மகளிர் கல்லூரியில் செயலமர்வு நடைபெற்றது. (202)

## மரண அறிவித்தல்
### சின்னத்தம்பி அப்பையா
*(பிரபல புகையிலை வியாபாரி)*



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கு, காரைக்கால் சிவன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி அப்பையா 09.11.06 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் இந்திராணி (இந்தியா), சோதிலிங்கம் (அபிராமி பெஷன் கவுஸ், சுன்னாகம்), புஸ்பலிங்கம் (கனடா), புஸ்பராணி, சண்முகலிங்கம் (இத்தாலி) யோகராணி, கணேசலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற தியாகராசா, கிருஷ்ணாம்பாள், நவரத்தினராசா (சுவிஸ்), வீரசிங்கம் (சுவிஸ்), சிவமலர் (கனடா), ஒபிலியா (நீர்கொழும்பு), ரஜனி (சுவிஸ்) ஆகியோரின் மாமனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, கந்தையா, வியாழப்பிள்ளை, தர்மலிங்கம், செல்லமுத்து, பூரணம், பொன்னம்மா, பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோரனும் மதியாபரணம் (வளர்மதி புடைவை), லயன் இலகுநாதன் (தலைவர், சுமநல கேந்திரநிலையம், உடுவில்), ராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

தவராசா - சந்திரிகா (பிரான்ஸ்), வரதராசா - தர்ஷினி (சுவிஸ்), வனிதா - நடேசலிங்கம் (கனடா), ஆனந்தன் - ஜெயா (பிரான்ஸ்), சுதா - கிருஸ்ணகுமார், குகராஜா (இந்தியா), விஜிதா (இந்தியா), தயாளினி - கருணாகரன் (கனடா), ஷயந்தி - அனுசீலன் (கனடா), றகிதா (இந்தியா), யசிந்தா, சிவரூபன் (விரிவுரையாளர் பேராதனை, பொறியியல்பீடம்), கோகிலவதனி (யாழ். பல்கலை நுண்கலைப்பீடம்), ஜெகன் (இத்தாலி), கோகிலப்பிரியா (இந்தியா), நீதன் (கனடா), கஜன் (கனடா), கிரி (கனடா), யசிந்தா (யா/இ.ம.க.), விஜித்ரன் (யா/இ.ம.க.) சிந்துஜன் (Negombo International School), சபீனன் (சுவிஸ்) ஆகியோரின் பேரனும் விஜுஜா (சுவிஸ்), தணிகன் (சுவிஸ்), பிரித்தா (பிரான்ஸ்), பிருத்திகா (பிரான்ஸ்), பிருதுவிகா (பிரான்ஸ்), பிருந்தா (யா/இந்து ஆரம்பப் பாடசாலை), பிரவீணா (இந்தியா), பிரணவி (இந்தியா), நிஷாந் (கனடா), அஜித் (கனடா), யதுஷன் (பிரான்ஸ்), யாதவி (பிரான்ஸ்), அஸ்வின் (கனடா) ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.11.2006) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்துமயானத்தில் தகனம்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (55121)

காரைக்கால் சிவன் கோயிலடி,
இணுவில் கிழக்கு, இணுவில்.
021 4591921

தகவல்:
பிள்ளைகள்.

## சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)
## கிளை முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்
(அமைய அடிப்படை)

தற்போதைய சூழ்நிலையில் ஏற்பட்ட அசாதாரண வேலைப் பழுவை உத்தேசித்து, சங்க எல்லைப்பரப்பிற்குள் வசிக்கின்ற சேவை மனப்பாங்குடன் முழு நேரமாக உழைக்கும் விருப்பார்வமுடைய, 18 வயது தொடக்கம் 40 வயதுக்கு இடைப்பட்ட ஆண் பாலாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வேலை செய்யும் நாளொன்றிற்கு சகல படிகளும் உட்பட 250.00 வழங்கப்படும்.

வேலைக்குத் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் சங்கத்தால் கோரப்படும் பிணைத் தொகையை ரொக்கமாகச் சங்கத்தில் வைப்புச் செய்யத் தயாராக இருக்கவேண்டும். அதற்கான வட்டி சங்கத்தால் வழங்கப்படும்.

சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 22.11.2006 ஆம் திகதிக்கு முன்பதாக *"பொது முகாமையாளர், சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து.), கண்டி வீதி, சாவகச்சேரி"* எனும் முகவரிக்கு *"அமைய அடிப்படை கிளை முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்"* என கடித உறையின் இடதுமேல் மூலையில் எழுதப்பட்டு தபால்மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கம்,**
**சாவகச்சேரி.**

– பொது முகாமையாளர்.

(சி/54304)

## முதலாம் ஆண்டு நினைவில்



மலர்வு
31 * 07 * 1975

உதிர்வு
24 * 10 * 2005

# இராமலிங்கம் சதீஸ்
*[சதீஸ் வீடியோ & போட்டோ உரிமையாளர்]*
திதி: சப்தமி

*ஆயுள்வரை கூட வந்து*
*ஆதரிப்பாய் என்றிருந்தோம்*
*அந்தரத்தில் தவிக்கவிட்டு*
*மறைந்துநீ போனதேனோ?*
*உருவாய் நீ இன்று இல்லை*
*எம்முடன் இல்லை ஆனால்*
*நினைவாய் தொடரும் எந்நாளும்*
*எம் உறவு......*

தகவல்:
குடும்பத்தினர்.

(55117)

உதயன்

தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# கண்ணீரும் புலம்பலும் விட்டு காரியமாற்றத் துணிந்து எழுக!

இலங்கையில் தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினையைத் தவறான கண்கொண்டு - தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை 'பயங்கரவாதமாக' சித்திரித்து - நோக்கிய இந்தியாவுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் இப்போது மெல்ல மெல்ல உண்மை புரியத் தொடங்கியிருக்கின்றது போலும்.

இலங்கையின் அண்மைக்கால சம்பவங்கள் தொடர்பாக இந்தியாவும் சர்வதேச சமூகமும் காட்டும் பிரதிபலிப்புகள் அதனை வெளிப்படுத்துகின்றன.

வாகரையில் கடந்த எட்டாம் திகதி ஐம்பதுக்கும் அதிகமான அப்பாவித் தமிழர்களின் - அகதிகளின் - உயிர் குடிக்கக் காரணமான இலங்கை இராணுவத்தின் கண்மூடித்தனமான ஷெல், பீரங்கித் தாக்குதல்கள் குறித்து இலங்கை அரசுத் தலைமை கூறிய சமாதானங்கள் - சமாளிப்புகள் - ஏற்கவே முடியாதவை என்பதை சர்வதேச சமூகம் திட்டவட்டமாகவும் வெளிக்காட்டி விட்டது.

ஏதுமற்ற தமிழ் அகதிகளை விடுதலைப் புலிகள் மனித கேடயமாகப் பயன்படுத்தியமையால் வந்த விளைவு என்ற சாரப்பட இலங்கை அரசுத் தரப்பு முன்வைத்த சமாளிப்பு, சமாதானம் சர்வதேச சமூகத்திடம் எடுபடவேயில்லை.

இந்த மனிதப் படுகொலைக் கொடூரம் குறித்து அமெரிக்கா ஆழ்ந்த கவலை வெளியிட்டிருக்கின்றது. பிரிட்டன் உள்ளிட்ட ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அதிர்ச்சி தெரிவித்திருப்பதோடு கண்டனமும் வெளியிட்டுள்ளன.

ஐ.நா. சபையும் இக்கொடூரத்தைக் கண்டித்துள்ளது. இந்த அநியாயச் சாவுகளால் அனுசரணைத் தரப்பான நோர்வே குழப்பமடைந்துள்ளது.

இந்தியாவிலோ அளவுக்கு அதிகமாக அதிர்ச்சி அலைகள் எழுந்துள்ளன. அங்கு புதுடில்லியிலும் சரி, சென்னையிலும் சரி - மத்திய அரசிலாகட்டும், மாநில அரசிலாகட்டும் - அரசியல் தலைமைகளும் அதிகாரவர்க்கமும் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திலிருந்து தூர விலகி நிற்பதையே விரும்பினாலும், ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக அங்கு எழுந்துவரும் மக்கள் ஆதரவு அலை காரணமாகத் தங்கள் நிலைப்பாட்டை ஒரேயடியாக மாற்றிக்கொண்டு, ஈழத்தமிழர்களின்பால் கரிசனை உள்ளவர்கள் தாங்கள் என்பது போல குறைந்த பட்சம் வெளிப்பாட்டுக்கு நடிக்கவாவது வேண்டும் என்ற இக்கட்டு நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

தமிழக முதல்வர் மு.கருணாநிதி சுமார் ஐந்து ஆண்டு காலம் அதிகார அஞ்ஞாதவாசத்திலிருந்து விட்டு, இப்போதுதான் மீண்டும் ஆட்சிக்கு வந்திருக்கின்றார். ஏற்கனவே இரண்டு தடவைகள், ஈழத்தமிழர் விவகாரங்களை ஒட்டி தமது ஆட்சி அதிகாரத்தை குறுகியகாலத்தில் இழந்து, பதவியைப் பறிகொடுத்த அனுபவம் அவருக்கு உண்டு. 'சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது' என்ற மொழிக்கு ஒப்ப இப்போது ஆட்சிப்பீடம் ஏறிய பின்னர் ஈழத்தமிழர் விவகாரத்தில் தலைநீட்டுவதேயில்லை என்ற பாணியில்தான் செயற்பட்டு வந்தார். இலங்கைத் தமிழர் விவகாரத்தை தொடுவானேன், வம்பை விலைக்கு வாங்குவானேன் என்ற கணக்கில் அவர் ஈழத்தமிழர் விவகாரத்தைக் கையாள முற்பட்டார். அதனால்தான் ஈழத்தமிழர்களின் இனப்பிரச்சினை தொடர்பான விவகாரங்களில் பட்டும் படாமலும் - பிடி கொடுக்காமலும் - காய்நகர்த்தி வந்தார் அவர்.

ஆனால் ஈழத்தமிழர்களுக்கு எதிரான தென்னிலங்கை சிங்கள அரசின் அராஜகக் கெடுபிடிப்போக்கு, தமிழகத்தில் பாமர மக்கள் மத்தியிலும் அதிர்ச்சி மற்றும் உணர்ச்சி அலைகளை எழுப்பிவிட்டதால், அதற்கு அடிபணிந்து காரியமாற்றவேண்டிய நெருக்கடி - கட்டாயம் - அவருக்கு உருவாகியிருக்கின்றது.

*''இலங்கைத் தமிழர் விடயத்தில் இந்தியா இன்னும் எவ்வளவு காலத்துக்குப் பொறுமை காப்பது என்ற நியாயமான கேள்விக்குப் பதிலளிக்கவேண்டிய வேளை வந்துவிட்டது.''* - என அவரே குறிப்பிடும் நிலைக்கும், அது குறித்து அவரே இந்திய மத்திய அரசிடம் வினாத் தொடுக்கும் கட்டத்துக்கும் நிலைமை இலங்கையில் கட்டுமீறியுள்ளது.

ஈழத்தமிழர்களுக்கு எதிரான தென்னிலங்கைச் சிங்களத்தின் அராஜகமும், கொடூரமும் அதிகரித்துள்ள பின்னணியில், இனிமேலும் அதைக் கண்டும் காணாமலும்போல, புறமொதுக்கி வாளாவிருப்பது இயலாத காரியம் என்ற நெருக்குதலான உண்மையை - கட்டாயயதார்த்தத்தை - புரிந்துகொண்ட நிலைமையில்தான் அவர் இந்த விடயத்தில் கருத்து வெளியிடவேண்டிய நிலைக்கு - அதுவும் ஈழத்தமிழர்களின் பரிதாப நிலைக்கு எதிராகக் குரல் எழுப்பும்படி இந்திய மத்திய அரசைத் தூண்டும் அளவுக்கு - வந்திருக்கின்றார்.

இலங்கைத் தமிழர் விடயத்தில் இந்திய நாடு இன்னும் எவ்வளவு காலத்துக்குப் பொறுமை காத்திடப்போகின்றது என்ற நியாயமான கேள்வியை மத்திய அரசிடம் எழுப்பும் வேளை வந்துவிட்டதாக கலைஞர் கருணாநிதி குறிப்பிடுகின்றார்.

அதே கருணாநிதியிடம் உலகத் தமிழினமும் அதேபோன்ற ஒரு நியாயமான கேள்வியை முன்வைக்கும் வேளையும் வந்துவிட்டது.

ஈழத்தமிழர் விவகாரத்தில் அவர்களோடு தொப்புள்கொடி உறவு போன்ற தொடர்பை வைத்திருக்கும் தமிழகம் இன்னும் எவ்வளவு காலத்துக்குப் பொறுமைகாக்கப்போகின்றது? - என்பதே அக்கேள்வி.

தமிழகத்தின் தற்போதைய முதல்வர் என்ற முறையில் மட்டுமல்லாமல் உலகத் தமிழினத் தலைவர் என்ற மகுடத்தை சூடிக்கொண்டவர் என்ற முறையிலும் இந்த வினாவை தமிழக முதல்வரிடம் உரிமையுடன் கோர ஈழத்தமிழர்கள் விரும்புகின்றார்கள்.

இந்தியாவின் மத்தியில் அதிகாரத்தில் இருக்கும் பிரதமர் மன்மோகன் சிங்கின் சிறுபான்மை அரசு, ஆட்சியில் தொடர்ந்து நீடிப்பதற்கு கலைஞர் கருணாநிதி போன்ற மாநிலக் கட்சிகளின் முழுத் தயவில்தான் தங்கியுள்ளது

இவ்வாறு மத்திய அரசின் ஆட்சி நீடிக்கும் விடயத்தில் - ஆட்சி வண்டியின் மூக்கணாங்கயிறு - கலைஞர் கருணாநிதி போன்ற தலைவர்களின் கைகளில்தான் தங்கியுள்ளது என்பது ஊரறிந்த உண்மை.

இப்படியான வலிமையுள்ள தமிழர் தலைவர் - உலகத் தமிழரின் தலைவர் - இந்திய மத்திய அரசைப் பார்த்து அதைச் சமாளிக்கும் விதத்தில் ''ஈழத்தமிழர்கள் விடயத்தில் இந்தியா இன்னும் எவ்வளவு காலத்துக்குப் பொறுமை காப்பது என்ற நியாயமான கேள்விக்குப் பதிலளிக்கும் வேளை வந்துவிட்டது'' என்று கூறுவது போதுமானதல்ல; பொருத்தமானதல்ல.

''பொறுமை காக்கும் எல்லை கடந்து விட்டது பொறுத்தது போதும் பொங்கி எழுவோம்!'' - என்ற சாரப்பட புதுடில்லிக்கு அவர் சூடு கொடுத்திருக்கவேண்டும். அதுவே பொருத்தமானது. உலகத் தமிழினத்தின் தலைவர் என்ற மகுடத்தைச் சூடுவதற்கான தகுதியுடையவர் தாம் என்பதை அத்தகைய செயற்பாடு மூலமே அவர் நிரூபிக்கமுடியும்.

அந்த வகையில் ஈழத்தமிழினத்துக்கு உரியதை அவர் ஆற்றுவதற்கு இன்னும் காலம் கடந்துவிடவில்லை.

இன்னும் உரிமையோடு - இன்னும் உறுதியோடு - இன்னும் தமிழின மானத்தோடும் பொறுப்போடும் - அவர் பொங்கி எழவேண்டும்.

ஈழத்தமிழினத்துக்காகக் கண்ணீர் விடுவதும்,விட்ட கண்ணீர் காயமுன்னர் அடுத்த கண்ணீரா என்று புலம்புவதும் இப்போது காலம் கடந்த விவகாரங்கள். கண்ணீரை விடுத்து காரியமாற்ற முன்வாருங்கள்; கருமமாற்ற துனிந்து நில்லுங்கள்! அதுவே இன்றைய தேவை.

# இராமேஸ்வரம் சென்று நங்கூரமிட்ட கப்பல் நிலைமை சீரானதும் காங்கேசன் திரும்பியது

## பயணிகள் வெளியிடும் தகவல் இது

யாழ்ப்பாணம்,நவ.12

பருத்தித்துறைக் கடலில் கடந்த வியாழனன்று இரவு இடம்பெற்ற மோதல் சம்பவத்தின் போது திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறை நோக்கி வந்த பயணிகள் கப்பல் இராமேஸ்வரத்தில் நங்கூரமிட்டு நிலைமை சீரானதன் பின்னரே மீண்டும் வெள்ளிக்கிழமை முற்பகல் காங்கேசன்துறையை வந்தடைந்தது.

இக்கப்பலில் பயணம் மேற்கொண்ட பயணிகள் இத்தகவலைத் தெரிவித்துள்ளனர்.

பயணிகள் கப்பல் சர்வதேச கடல் பரப்பின் எல்லையை அண்மித்தபோது கடலில் போர் அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக சமிக்ஞை கிடைத்ததாகவும் -

இதனை அடுத்து இராமேஸ்வரத்துக்கு தாம் கப்பலைத் திருப்பியதாகவும் கப்பலின் கப்டன் பின்னர் பயணிகளிடம் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் - நீண்ட நேரம் கடலில் பயணம் செய்த தமக்கு வெளியே என்ன நடக்கிறது என்பது தெரியவில்லை என்றும் -

இராமேஸ்வரத்தில் கப்பல் நங்கூரமிட்டதன் பின்னரே மோதல் தொடர்பான தகவல் தமக்குத் தெரியவந்ததாகவும் பயணிகள் பலரும் தெரிவித்தனர்.

மறு சமிக்ஞை வரும் வரை அங்கு நின்ற கப்பல் நேற்றுமுன்தினம் காலை சமிக்ஞை கிடைத்ததும் மீண்டும் காங்கேசன்துறை நோக்கிப் புறப்பட்டது.

பிற்பகல் 2 மணியளவில் நாம் பஸ்கள் மூலம் யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வரப்பட்டோம். கப்பலில் குடிப்பதற்கு தண்ணீர் கூட இன்றி நாம் பெரும் சிரமத்தை எதிர்கொண்டோம் - என்று பயணிகள் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (203)

# கோப்பாய் - கைதடி பிரதான வீதியை பாவனைக்கு திறந்துவிடக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.12

கடந்த நான்கு மாதங்களாக மூடப்பட்டுள்ள கோப்பாய் - கைதடி வீதியினை திறந்து பொதுமக்களின் பாவனைக்கு அனுமதிக்கவேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் பிரதேச விவசாயிகள் தமது உற்பத்திப் பொருள்களை இவ் வீதி ஊடாக தென்மராட்சிப் பிரதேசத்திற்கு கொண்டுசெல்வதாகவும் -

வீதி மூடப்பட்டதை அடுத்து தமது உற்பத்திப் பொருள்களை தென்மராட்சிப் பிரதேசத்திற்கு கொண்டு செல்வதற்கு பல மைல்கள் தூரம் பயணம் செய்யவேண்டியுள்ளதாகவும் - விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

குறிப்பிட்ட வீதி யில் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்ட பஸ் தற்போது கோப்பாய், கல்வி யங்காடு, செம் மணி நாவற்குழி ஊடா கச் செல்வதால் தமது உற்பத்திப் பொருள் களை உரிய நேரத்தில் தென்மராட்சிப் பகுதிக்குக் கொண்டு சென்று விற்பனை செய்ய முடியவில்லை என்றும் அவர்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

# வாழைச்சேனையில் வெள்ளி இரவு இளம் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு,நவ.12

வாழைச்சேனை விநாயகபுரத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 8 மணியளவில் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அதேயிடத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான சுப்பிரமணியம் சந்திரபோஸ் (வயது 31) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

பிரஸ்தாபநபர் வீட்டில் இருந்த சமயம் அங்கு வந்த ஆயுததாரிகள் அவரை அழைத்தாகவும், அவர் வெளியே வர மறுத்ததாகவும் -

துப்பாக்கியைக் காட்டி மிரட்டி அவரை அழைத்துச் சென்ற நபர்கள் பின்னர் அவர்மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்று விட்டனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (1)

# கடற்சமரில் மீட்ட சடலத்தை கடற்படையினர் கையளித்தனர்

திருகோணமலை,நவ.12

திருகோணமலை கடற்பரப்பில் சல்லிக்கும் - கோணேஸ்வரத்திற்கும் இடையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கடற்சமரின்போது மீட்கப்பட்ட விடுதலைப்புலி உறுப்பினரின் சடலம் செஞ்சிலுவைச் சர்வதேச குழுவிடம் கையளிக்கப்பட்டது.

திருகோணமலை கடற்படைத்தளத்தில் வைத்து இச்சடலம் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் கையளிக்கப்பட்டது.

கிழக்கில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் உயிரிழந்த விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவரின் சடலத்தைத் படகு மூலம் வன்னிக்கு எடுத்துச் சென்ற சமயம் அந்தப் படகுகள் மீது தாம் தாக்குதல் நடத்தியதாகவும்-

இச்சம்பவத்தின் போது விடுதலைப் புலி உறுப்பினரின் சடலம் மீட்கப்பட்டது என்றும் - கடற்படையினர் தெரிவித்தனர்.

குறிப்பிட்ட சடலமே செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளிடம் கையளிப்பதற்காக இச்சடலம் செஞ்சிலுவைச் சர்வதேச குழுவினால் வன்னிக்கு எடுத்துச் செல்லப்பட்டது. (1-151)

# சுகாதார தொண்டர்களுக்கு கலந்துரையாடல்

தென்மராட்சி,நவ.12

யாழ்.மாவட்ட சுகாதாரத் தொண்டர்களுக்கான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கோப்பாய் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

மாவட்டத்தின் சுகாதார திணைக்கள நிறுவனங்களில் சேவைபுரியும் அனைத்து தொண்டர்களையும் இக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (203)

## நாளை

ஐப்பசி 27
திங்கட்கிழமை
13.11.2006
திதி : அட்டமி
பிற்பகல் : 3.51
நட்சத்திரம் : ஆயிலியம்
முற்பகல் : 10.32
[illegible] : 10.07 - 10.37
[illegible] : 07.37 - 09.07

# படுகொலைகள்

யாழ்ப்பாணம், நவ.12

ஊர்காவற்றுறை அம்பலவாணர் வீதியில் நேற்றுமுன்தினம் மாலை 6.30 மணியளவில் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கரம்பொன் மேற்கைச் சேர்ந்த ஜேசுதாசன் செபரட்ணம்(சின்னவன் - வயது 38) என்னும் 2 பிள்ளைகளின் தந்தையே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

தலையில் 6 சூட் டுக்காயங்களுடன் இவரது சடலம் பிரதான வீதியில் காணப்பட்டது.

சம்பவ இடத்துக்கு நேற்றுக்காலை சென்ற ஊர்காவற்றுறை நீதிவான் ஜெயராமன் றொக்ஸி விசாரணைகளை நடத்தினார்.

சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ்.ஆஸ்பத்திரிக்கு அனுப்புமாறு நீதிவான் உத்தரவிட்டார். (1-16-15-78)

* * *

யாழ்ப்பாணம்,நவ.12

யாழ்.நகரில் மின்சார நிலைய வீதியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் காயமடைந்தார்.

பிரப்பங்குளத்தைச் சேர்ந்த அழகர்சாமி சரவணகுமார்(வயது 35) என்பவரே உயிரிழந்தவராவார்.

கோபால் லேன், வண்ணார்பண்ணையைச் சேர்ந்த நடராசா நிசாந்தன் என்பவர் காயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (1-15-78)

# பருத்தித்துறையில் பொருள் இறக்கும் பணி நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.12

பருத்தித்துறையில் கப்பலில் இருந்து பொருள் இறக்கும் பணி நேற்று ஆரம்பமானது.

நேற்றுமுன்தினம் கப்பலில் இருந்து பொருள் இறக்கும் பணி இடம்பெறவில்லை. மீண்டும் நேற்று பொருள் இறக்கும் பணி ஆரம்பமாகியது.

'ஜால' என்ற கப்பலில் இருந்து பொருள் இறக்கும் பணி நேற்று இடம்பெற்றது. (1)

# நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் நானாவிதப் பொருள்கள் விநியோகம்

நல்லூர்,நவ.12

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்டவர்களுக்கு பங்கீட்டு அட்டைகளுக்கான - நானாவிதப் பொருள்கள் நாளை திங்கட்கிழமை தொடக்கம் காலை 9 மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரை விநியோகிக்கப்படவுள்ளன என்று பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம் அறிவித்துள்ளார்.

நாளை திங்கட்கிழமை ஜே/97, ஜே/98, ஜே/101ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு ஜே/05 கிளையிலும்-

ஜே/92, ஜே/93, ஜே/94 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு ஜே/17 கிளையிலும்-

ஜே/102, ஜே/103 கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு ஜே/12ஏ கிளையிலும்-

ஜே/91, ஜே/107, ஜே/108 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு ஜே/12கிளையிலும்- வைத்து பொருள்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை ஜே/99, ஜே/100 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு ஜே/05 கிளையிலும்-

ஜே/95, ஜே/96 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு ஜே/17 கிளையிலும்-

ஜே/104, ஜே/105, ஜே/106 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு ஜே/12ஏ கிளையிலும் -

ஜே/109 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு ஜே/12 கிளையிலும் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

ஒரு பங்கீட்டு அட்டைக்கு 250 கிராம் செத்தல் மிளகாய், 250கிராம் மல்லி, 250 கிராம் சர்க்கரை, 250கிராம் உள்ளி, 500கிராம் பயறு, 300கிராம் கடலை, 50கிராம் வெந்தயம், 1/4 லீற்றர் தேங்காய் எண்ணெய் என்பன விநியோகிக்கப்படவுள்ளதாகப் பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார். (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏ-9 போல அம்பாந்தோட்டை வீதியையும் மூடிவிட்டு அங்கும் கப்பல் மூலம் பொருள்களை அனுப்பலாமே..!

## சிங்கள தொலைக்காட்சிக்கு வழங்கிய இறுதிப்பேட்டியில் ரவிராஜ்

கொழும்பு, நவ.12

இந்த நாட்டின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஏ-9 வீதியில் பாதுகாப்பு பிரச்சினை இருப்பதாக கூறி அதனை பூட்டிவைத்துக்கொண்டு, யாழ்ப்பாணத்துக்கு கப்பல் மூலம் பொருள்களை அனுப்ப முயற்சிக்கின்றீர்களே அது போல உங்களது இடமான அம்பாந்தோட்டை வீதியிலும் பாதுகாப்பு பிரச்சினை இருக்கிறது தானே..! எனவே அந்த வீதியையும் பூட்டி விட்டு அங்கும் கப்பல் மூலம் பொருள்களை அனுப்பலாமே! ஏன் அதைச் செய்யவில்லை..? இவ்வாறு மாமனிதர் ரவிராஜ் நேற்று முன்தினம் தாம் கொலை செய்யப்படுவதற்கு - சுமார் அரைமணிநேரத்துக்கு முன்பதாக 'தெரண' என்ற சிங்கள தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கியிருந்த செவ்வியில் தெரிவித்திருந்தார்.

மும்மொழிகளிலும் வல்லவரான ரவிராஜ் எம்.பி, சிங்களத்தில் வழங்கிய இந்த பேட்டியில் தெரிவித்த முக்கிய விடயங்கள் வருமாறு:-

ஏ-9 பாதை திறக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றது. இதனிடையே ஒக்ரோபர் 16ஆம் நாள் வடக்கு - கிழக்கை பிரிக்க வேண்டும் என்று அதிஉயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இருப்பினும் அந்தத் தீர்ப்பில் எங்களுக்குப் பிரச்சினை இல்லை. எமக்கு அரசியல் பிரச்சினை உள்ளது. வடக்கு - கிழக்கு மக்கள் இணைந்தே வாழ்கின்றனர். வடக்கு - கிழக்கு இணைந்தே இருக்க வேண்டும் என்பதே அந்த மக்களின் அபிலாசையாகும். அந்த மக்களினது அடிப்படை மனித உரிமையும் அது தான்.

1995 ஆம் ஆண்டு ஏ-9 பாதை திறப்புக்காக ஜயசிக்குறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அரசாங்கத்தால் திறக்க முடியவில்லை என்று கூறப்பட்டால் அந்த மக்கள் இந்த நாட்டின் மக்கள் இல்லை என்கிற தோற்றம்தானே வெளிப்படும். நாங்கள் கப்பலில் உணவுப் பொருள்களை தருகின்றோம் எனில் எல்லாம் எதனை வெளிப்படுத்துகின்றது?

ஏ-9 பாதை மூடப்பட்டமைக்கு விடுதலைப் புலிகள் வரி அறவிடுகிறார்கள் என்று அரசாங்கம் கூறுகின்றது. என்னே ஒரு பொய்? ஏ-9 பாதை திறப்பு என்பது 2002 ஆம் ஆண்டு நடந்தது. அதுவரை தமிழீழ விடுதலைப் புலிகள் எப்படி வாழ்ந்து கொண்டிருந்தனர்.? ஏ-9 திறப்புக்கு முன்னர் அவர்கள் நிதிபெறவில்லையா? அவர்களிடம் போதுமான உணவு இதர வசதிகளும் இருந்தது இல்லையா? அரசாங்கத்தின் கீழ்த்தரமான பொய் இது.

நான் ஒன்றை உறுதியாகச் சொல்கிறேன். ஏழை மக்களுக்கான இலவசமாகப் பிரதேச செயலகங்களினூடே விநியோகிக்கப்படுகின்ற அத்தியாவசியப் பொருள்கள் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு போதும் வரி விதித்தது இல்லை. மேலும் எந்த மக்கள் விடுதலைப் புலிகளுக்கு வரிசெலுத்துகின்றனர். மஹிந்த ராஜபக்ஷவா?, ஹெகலிய ரம்புக்வெலவா? ஏன் இந்த ரவிராஜ் கூட இல்லை...அவர்கள் பிரதேசத்தில் வாழும் மக்கள் தானே..

ஏ-9 பாதை திறக்கப்பட்ட போது தமிழீழ விடுதலைப் புலிகளின் வரி விதிப்புடன் கூட பெற்றோல் விலையில் விலை 10 ரூபாய் வித்தியாசம்தான் இருந்தது. பூநகரிப் பாதை ஊடாக கிளிநொச்சி செல்வது என்பது அதிக தொலைவும் கடினமான சாலையும் கொண்டதாகும். கடலிலிருந்து 2 கிலோமீற்றர் தொலைவில் தான் அந்தப் பாதை உள்ளது. இருந்தபோதும் அந்தப் பாதையை பார்வையிட்டுச் சென்றவர்களுக்கு என்ன நடந்தது? கண்காணிப்புக் குழுத் தலைவர் மயிரிழையில் உயிர்தப்பி பதுங்கு குழிக்குள் பதுங்க வேண்டியதாயிற்று. இந்த பூநகரிப் பாதையினூடாக சென்றால் வரி இருக்காதா?

மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஒன்றை சொல்லி கொள்கின்றேன்... அம்பாந்தோட்டைக்குச் செல்லும் பிரதான பாதையை மூடிவிட்டு கொழும்பிலிருந்து கப்பலினூடே பொருள்களை எடுத்துச்செல்லுங்களேன் அம்பாந்தோட்டையில் பயங்கரவாதப் பிரச்சினை என்கிறீர்களே.. ஏன் எப்போதுமே பயங்கரவாதம் தொடர்பிலான விவகாரத்தையே பேசுகிறீர்கள்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் 1.1 சரத்தில் தெளிவாக ஏ-9 பாதை திறக்கப்படவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அதனை அரசாங்கம் விரும்பவில்லை எனில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்கவில்லை என்று அரசாங்கம் ஏன் சொல்லவில்லை.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் முடிந்து போனால் யுத்தம் தொடங்கிவிடும். அப்பகுதி மக்களுக்கு அதனால் எதுவும் இல்லை. ஏ-9 பாதை மூடப்பட்டமையால் அப்பாவி மக்கள் சொல்ல முடியாத துயரங்களுக்கு ஆளாகியுள்ளனர். அப்பகுதி விலங்குகள் கூட பட்டினியால் சாகின்றன. - என்றார் ரவிராஜ்.

## கொழும்பில் கம்பன் கழக கானாமிர்தம்

கொழும்பு கம்பன்கழகம் நடத்தும் 'ஸ்ரீராம நாம கானாமிர்தம்' இசைவேள்வி நிகழ்வு இன்று தொடக்கம் எதிர்வரும் 19ஆம் திகதி வரை வெள்ளவத்தை ராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

மொறீஸியஸ் நாட்டின் இலங்கைக்கான தூதுவரும் கொழும்பு கம்பன் கழகத் தலைவருமான தெ.ஈஸ்வரன் தம்பதியர் இன்றைய தினம் மாலை மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பார்கள். கம்பன் கழகப் பெருந்தலைவரும் உச்ச நீதிமன்ற நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் தலைமையுரை ஆற்றுவார்.

இந்த இசைவேள்வி நிகழ்வில் ஈழத்தினதும், தமிழகத்தினதும் மூத்த இளம் கலைஞர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளனர். (அ-த)

## ஓசானிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்புலிகளுக்கும் இடையில் மோதல் வெடித்தது.

இதனையடுத்து பல சிரமங்களுக்கு இடையில் காங்கேசன்துறையில் பயணிகளை இறக்கிய பின்னர், திருமலை திரும்பிய இக்கப்பல் சேவையை இடைநிறுத்தி நேற்றுக் கொழும்பு திரும்பியது. (1-151)

## ரவிராஜ் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிகளின் ஆதரவாளர்களும் ஒன்றாகச் சேர்ந்து படுகொலை செய்யப்பட்ட ரவிராஜ் எம்.பியின் பூதவுடல் வைக்கப்பட்டிருக்கும் பொரளை றேமண்ட் மலர்ச்சாலைக்குச் சென்று அஞ்சலி செலுத்துவர்.

அங்கிருந்து அவர்கள் கொழும்பு நகர மண்டபத்துக்கு கண்டனப் பேரணியாகச் செல்வர்.

பேரணி சென்றடைந்த கையோடு நகர மண்டப வளவில் கண்டனக் கூட்டத்தை நடத்த ஏற்பாடாகியுள்ளது.

கண்டனக் கூட்டத்தில் சுதந்திரக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, ஜாதிக ஹெல உறுமய தவிர்ந்த அனேகமாக ஏனைய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் உரையாற்றுவர்.

கண்டனப் பேரணிக்கும், கண்டனக் கூட்டத்துக்கும் மேலதிகமாக நாளை திங்கட்கிழமை கொழும்பில் கடைகளை மூடுமாறு வேண்டுகோள் விடுக்கவும் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் முடிவு செய்யப்பட்டது. (அ)

### மரண அறிவித்தல்

**கந்தசாமி ஜானகிஅம்மா**

தெல்லுவை, வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி ஜானகிஅம்மா நேற்று (11.11.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 2மணியளவில் எள்ளங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.தனேஸ்வரன், (மருமகன்).
தொ.பே.: 0602213396.

## ரவிராஜின் பூதவுடலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரியிருந்தது.

அதேவேளை, ரவிராஜ் எம்.பியின் பூதவுடலுக்கு நேற்று அஞ்சலி செலுத்தச் சென்ற வெளிவிவகார அமைச்சர் சமரவீரவிடம் ரவிராஜ் எம்.பியின் குடும்பத்தினரும் இந்த வேண்டுகோளைமுன்வைத்திருந்தனர்.

இந்த நிலையில் - நேற்றிரவுபி.பி.ஸியின் தமிழோசைக்கு பேட்டியளித்த அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல -

இந்தக் கோரிக்கை குறித்து நாங்கள் பரிசீலித்தோம். இந்தக் கோரிக்கை முதல் முதலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் இருந்து வந்தது. இதில் அரசியல் நோக்கம் இருக்கிறது. இருந்தாலும் இந்தக் கோரிக்கை குறித்தும் இதனை செயற்படுத்துவதால் ஏற்படக்கூடிய பாதுகாப்புப் பிரச்சினைகள் குறித்தும் - பாதக அம்சங்கள் குறித்தும் நாங்கள் ஆராய்ந்தோம்.

ஏ-9 வீதியூடாக பூதவுடலைக் கொண்டு செல்வதால் ஏற்படக்கூடிய பாதக அம்சங்கள் குறையாத நிலையில், ரவிராஜ் அவர்களின் குடும்பத்தினர் விரும்பும் இடத்துக்குச்செல்ல வான்வழி போக்குவரத்துச் செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம் - என்றார்.

கேள்வி: ஓர் உடலை எடுத்துச் செல்வதால் எத்தகைய பாதுகாப்புப் பிரச்சினைகள் ஏற்படும்என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

பதில்: முகமாலையில் ஏ-9 பாதை மூடப்பட்டமைக்கு காரணங்கள் இல்லாமல் இல்லை. மரியாதைக்குரிய ரவிராஜின் உடலுடன் எத்தனைபேர் வருவார்கள் என்று எமக்குத் தெரியாது. சோதனைச் சாவடியில் இருப்பவர்கள் வழமையான சோதனைக்கு உட்படுத்தினாலும் கூட அது ரவிராஜ் அவர்களுக்குச் செய்கின்ற அவமரியாதையாகப் பார்க்கப்படும்.- என்று அமைச்சர் ரம்புக்வெல மேலும் தெரிவித்தார்.

## ரவிராஜ் எம்.பிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழிவையும் சந்தித்து வாழும் எம் மக்களை மீளவும் துயரச் சுமைக்குள் தள்ளியிருக்கிறது.

**அற்புத மனிதர்**

திரு. நடராஜா ரவிராஜ் அவர்கள் ஓர் அற்புதமான மனிதர். அபூர்வமான குணவியல்புகள் கொண்டவர். பந்தபாசங்களுக்கு அடிமைப்பட்டு, பொருளுலகால் ஆட்டிப்படைக்கப்படும் ஒரு பொம்மை மனிதர் அல்ல அவர்.

தமிழீழ மண் மீதும் மக்கள் மீதும் ஆழமான பற்றும் பாசமும் கொண்டவர். சிறந்த அரசியலாளர். சட்டமும் நீதியும் தெரிந்தவர். இவரிடம் புரட்சியுணர்வும் புதுமை புரிய வேண்டும் என்ற துடிப்பும் இருக்கிறது. நெஞ்சிலே துணிவும் மனதிலே தூய்மையும் இருக்கிறது. அத்துடன் இளமை மிடுக்கு இருக்கிறது. இவையெல்லாம் ஒன்று திரண்ட மனிதப்பண்பு இருக்கின்றது. இந்தப் பண்பு காண்பவர் நெஞ்சையெல்லாம் களவாடிக் கொள்கிறது.

அந்நிய ஆக்கிரமிப்பும் அதனால் எழுந்த அடிமை வாழ்வும் அவலமான சூழ்நிலைகளும் இவருக்கு சுதந்திர தமிழீழத்தின் தேவை பற்றிய தெளிவை ஊட்டின. சுதந்திரத்தின் மகிமை பற்றிய புரிதலை ஊட்டின. இவ்வாறு எழுந்த சிந்தனைத் தெளிவும் புரிதலும் அவரது சுயதரிசனமும் அவரை விடுதலையின் பாதையிலே தள்ளிவிட்டது.

அவரும் இந்த விடுதலைப் பாதையிலே தொடர்ந்து பயணித்து, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் அதன் இலட்சியத்தையும் முழுமையாக முழுமனதுடன் ஏற்று, தேசவிடுதலைப் பணியாற்றினார். தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு பல்வேறு வழிகளில் பங்களிப்புச் செய்தார்.

நாடாளுமன்ற அரசியலை பற்றிநின்றவாறு, தமிழ்த் தேசியத்திற்காக அயராது ஓய்வின்றி உழைத்தார். சிங்களப் பேரினவாதம் கோலோச்சும் கொழும்புக் கோட்டையில் நின்றவாறு, அது புரியும் இன அழிப்பையும் இராணுவ அராஜகத்தையும் மனித உரிமை மீறல்களையும் உலகத்திற்கு உரக்கக் கூறினார். சிங்கள அரசின் பொய்யான பரப்புரைகளைத் தனது சொல்லம்புகளால் துளைத்தெறிந்தார்.

தனது சொல்லாற்றலையும் மொழிப் புலமையையும் பயன்படுத்தி, தமிழ் மக்களின் நீதிக்கான உரிமைப் போராட்டத்தை அதன் உண்மையான பக்கங்களின் சிங்கள மக்களுக்கும் உலகிற்கும் தெளிவாக எடுத்துக் கூறினார். சிங்களப் படைகளினதும் ஆயுதக் குழுக்களினதும் தொடர்ச்சியான அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் அஞ்சாத நெஞ்சுடனும் அபாரமான துணிவுடனும் அநீதியை எதிர்த்துப் போரிட்டார்.

திரு. நடராஜா ரவிராஜ் அவர்களின் இனப்பற்றுக்கும் விடுதலைப் பற்றுக்கும் மதிப்பளித்து, அவரது விடுதலைப் பணியைப் கௌரவிக்கும் முகமாக ''மாமனிதர்'' என்ற அதியுயர் தேசிய விருதை அவருக்கு வழங்குவதில் நான் பெருமையடைகின்றேன். சத்திய இலட்சியத்திற்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்களைச் சாவு என்றும் அழித்துவிடுவதில்லை. சரித்திர நாயகர்களாக எமது தேசத்தின் ஆன்மாவில் அவர்கள் என்றும் வாழ்வார்கள்.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'- - என்று அதில் உள்ளது.

## ரவிராஜ் எம்.பியின் இறுதிக்கிரியை புதனன்று சாவகச்சேரியில்

கொழும்பில் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 15ஆம் திகதி புதன்கிழமை அவரது சொந்த இடமான சாவகச்சேரியில் இடம்பெறவுள்ளன.

ரவிராஜ் எம்.பியின் பூதவுடலை ஏ-9 வீதியூடாக சாவகச்சேரிக்கு எடுத்துச் செல்வதற்கு ஏற்பாடு செய்யுமாறு அரசாங்கத்திடம் கோரியுள்ளோம். எனினும் இதுவரை சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை.

பூதவுடலைத் தரை மூலம் எடுத்துச் செல்வதற்கான அனுமதி கிடைக்கப்பெறாவிட்டால் விமானம் மூலம் எடுத்துச் செல்வதற்கும்- சாவகச்சேரியில் இறுதிக்கிரியைகளை நடத்தவும் கூட்டமைப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளது என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

## வவுனியாவில் நேற்று பூரண ஹர்த்தால்

வாகரையில் அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்தும்- தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்தும் வவுனியாவில் நேற்று பூரண கடையடைப்பும் பணிப்புறக்கணிப்பும் மேற்கொள்ளப்பட்டன. 'தமிழ்த்தேசியப் படை' இவற்றுக்கான அழைப்பினை விடுத்திருந்தது.

## ஈழத்தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து, கடந்த 8ஆம் திகதி மட்டக்களப்பில் கதிரவெளி, வாகரையில் தமிழ் அகதிகள் தங்கியிருந்த பாடசாலைகள் மீது இலங்கை இராணுவம் தாக்குதல் நடத்தி குழந்தைகள் உட்பட 50 இற்கும் மேற்பட்ட அகதிகளை கொன்றுகுவித்தது பாதகமான செயலாகும்.

ஈழத் தமிழர் படுகொலையைத் தடுத்து நிறுத்த வேண்டிய கடமை இந்திய அரசுக்கு உண்டு. செஞ்சோலை குழந்தைகள் காப்பக படுகொலைக்கு இந்திய அரசு கண்டனம் தெரிவிக்காதது கடமை தவறிய செயலாகும். வாகரை அகதிகள் முகாமில் நடத்தப்பட்ட படுகொலையையும் கண்டிக்காதது இலங்கை அரசின் கொலை பாதகச் செயல்களுக்கு ஊக்கமளிக்கும் அணுகுமுறையாகும்.

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவையும் சிங்கள அரசுக்கு எச்சரிக்கையையும் எதிர்ப்பையும் தெரிவிக்கும் வகையில் வரும் 17 ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) முற்பகல் 11 மணியளவில் சென்னை மயிலாப்பூரில் உள்ள இலங்கைத் தூதரகத்திற்கு எதிரே ம.தி.மு.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் - என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

CHEMISTRY
A/L 2007
பௌதிக இரசாயனவியல்
அயன் சமநிலை
ஆரம்பம்:
13.11.2006 3.30 p.m.
By.S.Vasu
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

LOGIC
P.கமல்
குறியீட்டு அளவையியல்
ஆரம்பம்:
12.11.2006 (இன்று)
Sat, Sun. - 12 - 1
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

விண்ணப்பித்து விட்டீர்களா!
அமெரிக்கன் லொத்தர் விசாவுக்கான விண்ணப்பங்கள் எமது நிறுவனத்தின் ஊடாக இணையத்தளத்தின் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு பற்றுச்சீட்டும் வழங்கப்படுகின்றது
கட்டணம் :- 200/= மட்டுமே
உங்களுக்கும் அதிஷ்டம் உண்டு. ஒருமுறை விண்ணப்பித்துப் பாருங்கள். வெற்றி பெற்றால் விமானச் செலவுடன் அமெரிக்கா செல்லலாம்.
C.B Computer Academy
Station Road, Kondavil. T.P No. 021-4590291

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.11.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org